Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

FedEx Express



இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7319

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு:2035 கார்த்திகை 03 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால்05 (18.11.2004) வியாழக்கிழமை இதழ்:48

## பால்மாக்களின் விலை 30 வீதத்தால் அதிகரிக்கும்!

(கொழும்பு)

பால்மாக்களின் விலைகளை முப்பது வீதத்தால் அதிகரிப்பதென நுகர்வோர் பாதுகாப்புச்சபை நேற்றுத் தீர்மானித்துள்ளது.

உலகசந்தையில் பால்மாக்களின் விலை அதிகரித்துள்ளபோதிலும் இலங்கையில் அதிகரிக்கப்படவில்லையென்றும் இதனால் தமக்கு பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் பால் மா வழங்கும் நிறுவனங்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சபையிடம் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து நேற்றுக்கூடிய நுகர்வோர் பாதுகாப்புச்சபை - பால்மாக்களின் விலையை முப்பது வீதத்தால் அதிகரிப்பதென்று தீர்மானித்துள்ளது.எனினும் பால்மாக்களின் விலையை நிர்ணயம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனுக்கான வாழ்த்துக்கேடயம் தமிழ்ச்செல்வனிடம் கையளிப்பு!



யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கையளிக்கப்படுகிறது.



மத்திய கல்லூரி மாணவர்களால் கையளிக்கப்படுகிறது.

தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும், யாழ்.மத்திய கல்லூரி சமூகத்தினரும் தேசியத் தலைவருக்கான வாழ்த்துச் செய்திகள் அடங்கிய கேடயத்தினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வு நேற்றுக்காலை 11 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அரசியற்துறை நடுவப்பணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சாரதிக்கு விளக்கமறியல் நீடிப்பு!

தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் மோதி மோட்டார் சைக்கிளில் சென்ற இந்து மதகுரு உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ தண்ணீர் பவுசர் சாரதியான முதியான்சலகே விஜயசிங்க என்ற இராணுவச் சிப்பாயை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பி.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட இராணுவச் சாரதியைக் கைதுசெய்த பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே நீதிவான் இந்த உத்தரவை விடுத்தார்.

## நாகர்கோவில் முன்னணிக் காவலரண்கள் விவகாரம்:

# படையதிகாரிகள் - புலிகளின் தளபதிகள் சந்தித்து பேச்சு நடத்துவதற்கு யோசனை!

## கண்காணிப்புக்குழு நேற்று முன்வைத்தது

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் முன்னணிக் காவலரண்கள் முன்னகர்த்தப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக - பிராந்திய மட்டத்திலான கூட்டம் ஒன்றில் ஆராய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறையினர் மட்டுமன்றி தளபதிகளும், இராணுவ உயரதிகாரிகளும் பங்கேற்க வேண்டுமென்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு புதிய யோசனை ஒன்றை முன்வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியபோது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ்ஹொவ்டே இந்த யோசனையை முன்வைத்ததாகக் கூறப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



லான கூட்டம் ஒன்றில் ஆராய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறையினர் மட்டுமன்றி தளபதிகளும், இராணுவ உயரதிகாரிகளும் பங்கேற்க வேண்டுமென்றும் போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழு புதிய யோசனை வனைச் சந்தித்துப் பேசியபோது போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலை வர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹொவ்டே இந்த யோசனையை முன் வைத்ததாகக் கூறப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகள் குழு யாழ்.குடாவுக்கு நேற்றுத் திடீர் விஜயம்!

## பாதுகாப்பு நிலைமைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தது



முகமாலை சோதனைச்சாவடியில் கூட்டுப்படைத் தளபதி தயா சந்தகிரி தலைமையிலான படைத்தரப்பின் உயர்மட்டக் குழுவினர்...!

(யாழ்ப்பாணம்)

கூட்டுப்படைத் தளபதியாகப் பொறுப் பேற்றுக்கொண்ட பின்னர் வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - இராணுவ மற்றும் விமா னப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதி பர் சகிதமாக யாழ்.குடாநாட்டுக்கு நேற்று விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமை குறித்து மதிப்பீடு செய்தார்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் புடை சூழவே தயா சந்தகிரி குடாநாட்டுக்கு நேற்று விஜயம் செய்ததாகத் தெரியவருகின்றது.

பலாலியில் இவர்களை வரவேற்ற குடாநாட்டு கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், குடா நாட்டு பாதுகாப்பு நிலைமைகளை நேரில் காண்பித்து விளக்கமளித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள் , சுதந்திர சிற்பிகள் , எமது மண்ணில் ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள்.

வே.பிரபாகரன் – தமிழீழத் தேசியத் தலைவர்

இன்றைய பட்ஜெட்டில்

# அரசாங்க ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப் பிக்கப்படவுள்ள ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி அரசாங்கத்தின் முத லாவது வரவு - செலவுத் திட்டத் தின் மூலம் அரச ஊழியர்களுக்கு கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற் றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசாங்கம் தேர்தல் காலத்தில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் சூட்டுக்கு குடும்பஸ்தர் ஒருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொண்டையன் கேணியில் 49 வயதுடைய கிருஸ்ண பிள்ளை - தணிகாசலம் என்ற குடும பஸ்தர் அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரி யாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.00 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற யுவானந்தன் என்பவரால் கிருஸ்ணபிள்ளை தணிகாசலம் சுட் டுக் கொல்லப்பட்டதாக அவரது உற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கணக்கியல் டிப்ளோமா பரீட்சை முடிவுகளில்
# புதிய நடைமுறைகளை மாற்றுமாறு தொழில்டீபக் கல்லூரி மாணவர் கோரிக்கை

(ஆழியவளை)

தொழில் நுட்பக் கல்லூரிகளின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பரீட்சை முடிவுகளில் புதிய நடைமுறை கைக்கொள்ளப் படுவது குறித்து மாணவர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட்டபோது நான்கு பாடங்களில் - மூன்று பாடங்கள் சித்தியடைந்து ஒருபாடம் சித்தியடையாது விட்டால் மீளவும் நான்கு பாடங்களுக்கும் தோற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு முன்னர் இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. அதாவது நான்கு பாடங்களுக்குத் தோற்றி மூன்று பாடங்கள் மாத்திரம் சித்தியடைந்தால் 'றிவேட்' என அறிவிக்கப்படும் பாடத்தினை மாத்திரம் எடுத்து பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய முடியும்.

சித்தியடையாத பாடத்தை மட்டும் மீள்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைதல் வேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. தற்போதைய நடைமுறையால் மாணவர்கள் அதிருப்தியடைந்துள்ளதுடன் முன்னனர் இருந்த நடைமுறையை மீண்டும் பின்பற்றுமாறு கல்வியமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)

# அரியாலை விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள்!

(யாழ்ப்பாணம்)

அரியாலை - செம்மணிப்பகுதிக்கும், இளையதம்பி வீதிக்கும் இடையில் உள்ள விவசாய நிலங்களில் நீண்ட கால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் இம்முறை நெற்செய்கையில் ஈடுபடும் 20 விவசாயிகளுக்கு கமநலஅபிவிருத்தித் திணைக்களம் உலக உணவு விவசாய நிறுவனத்தின் உதவியின் கீழ் நெற்செய்கை சம்பந்தமான பயிற்சி வகுப்பினையும், விதைநெல், உரம் போன்றவற்றையும் வழங்கியுள்ளது.

இந்நிகழ்வு அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் அரியாலை விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.பத்மநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள் அரியாலைப்பகுதி விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் நல்லூர் பிரதேச விவசாய போதனாசிரியர் என். கே.நல்லதம்பி விவசாயிகளுக்கான போதனைகளை வழங்கினார். (55)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் படுகாயமுற்றார்!

தர்மபுரம் சந்திக்கு அண்மையாக நடைபெற்ற மோட்டார் சைக்கிள் - உழவு இயந்திர விபத்தின் போது இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தின் போது 25 வயதையுடைய வல்லிபுரம் சிவச்சந்திரன் என்பவரே காயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது வல்வெட்டித்துறையில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் வீதியின் குறுக்கே செல்ல முற்பட்ட உழவு இயந்திரத்துடன் விபத்துக்குள்ளான இவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்துக்குள்ளான உழவு இயந்திரம் தொடர்பாக காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வில்லூன்றி இந்து மயானத்தில் கலாசார சீர்கேடுகள் அதிகரிப்பு!

(சுதுமலை)

கொட்டடி வில்லூன்றி இந்து மாயானம் கலாசார சீர்கேடுகள் இடம்பெறுகின்ற இடமாக மாறியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான மேற்படி இந்து மாயானத்திற்கென காவலாளி இன்மையும் உரிய நிர்வாககட்டமைப்பு பேணப்படாமையுமே இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு காரணமாக அமைகிறது. சிறுவர்கள் புகைப்பிடிக்கும் இடமாகவும்,இளைஞர் - யுவதிகள் சந்திக்கும் இடமாகவும் மயானம் மாறிவருகிறது.

இதேவேளை - இந்த மயானத்தில் தகனம் செய்வதற்கு குறித்த கட்டண அறவீடு இன்மையால் மயானத்தில் தகனக்கிரியை மேற்கொள்பவர் தனது விருப்பத்திற்கேற்ப குறித்த தொகைப்பணத்தை அறவிட்டு வருகிறார். இதனால் அநேகர் பாதிக்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. மயானத்திற்கென காவலாளியை நியமித்து உரிய முறையில் நிர்வாகக் கட்டமைப்பையும் பேணுமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (91)

# அதிபர்களுக்கான வினைத்திறன் மேம்பாட்டுக்கான செயலமர்வு!

(உடுவில்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் வடமாகாண அதிபர்கள் சங்கத்தால் அதிபர்களுக்கான •வினைத்திறன் மேம்பாட்டு வழிகாட்டி செயலமர்வு எதிர் வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் தரம் 1 ஏ.பி ,பாடசாலை ஆகிய தகுதிகளையுடைய அதிபர்கள் பங்குபற்றவுள்ளனர். வள ஆலோசகர்கள், மாகாணக்கல்வி அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்துறைசார் அதிகாரிகள் கருத்துக்களை வழங்கவுள்ளனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலிகாமம் வலய கல்வித் திணைக்களம மேற்கொண்டுள்ளது (101)

## மாவீரர் வாரத்தில்
# ஆயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை!

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் தலா 1000 மரக்கன்றுகளை எதிர் வரும் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது.

இந்தவிடயம் சம்பந்தமாக நகர சபை, பிரதேசசபை ஆகியவற்றின் செயலாளர்களுக்கு தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.தேவா கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் நாட்டப்படும் மரக்கன்றுகள் அப்பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலம் பராமரிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

### கப்பூது கிராம மக்களுக்கு உதவிப் பொருட்கள்

இனவிவகார நல்லிணக்க அமைச்சினால் அடிப்படை வசதிகளற்ற கிராமங்களிலுள்ள வறிய மக்களுக்கு உதவும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் கப்பூது கிராமத்திலுள்ள ஐம்பது குடும்பங்களுக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் இன்று சம்பிரதாயபூர்வமாக பொருட்களை வழங்கவுள்ளார்.

வடமராட்சிக் கோட்ட அரசியற் துறையினரும் இந்த நிகழ்வில் பங்குபற்றவுள்ளனர். (12)

### வன்முறையற்ற தொடர்பாடல் விசேட பயிற்சிநெறி ஆரம்பம்

வன்முறைகளற்ற தொடர்பாடலுக்கான மத்திய நிலையம் நடாத்தும் கருத்தரங்கில் அரச ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் பொது சுகாதார உத்தியோகத்தர் கள் மற்றும் பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்களுக்கான 'வன்முறை களற்ற தொடர்பாடல்' என்ற தொனிப்பொருளிலான விசேட பயிற்சிநெறி நேற்று பத்தர முல்லவில் ஆரம்பமாகியது.

இதேபயிற்சி இன்னும் இரு தினங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இதற்கான போக்குவரத்து உணவு தங்குமிட வசதிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு பயிற்சி நெறியை நிறைவுசெய்பவர்களுக்கு பெறுமதியான சான்றிதழும் வழங்கப்படும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் இதன் பணிப்பாளர் நாயகம் திருமதி லூர்தாஸ் வில்லியம் மேற்கொண்டுள்ளார்.

# மாவீரர் நாளை முன்னிட்டு மானிப்பாயில் சிரமதானம் !

ஆறுகால் மடம் அறிவொளி விளையாட்டுக் கழகத்தினர் மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப் பணியினை மானிப்பாய் வீதியில் நாளை மறுதினம் சனிக்கிழமை மேற்கொள்ளவுள்ளனர்.

அறிவொளி சனசமூக நிலைய அங்கத்தவர்களும், விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து இந்த சிரமதானப்பணியை மேற்கொள்ளவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் க.தம்பிராசா தெரிவித்தார். (91)

# விசர்நாய் கடிக்கு இலக்காவோர் தென்மராட்சிப் பகுதியில் அதிகரிப்பு!

தென்மராட்சிப் பகுதியில் விசர்நாய்க்கடிக்கு உள்ளாவோர் தொகை கடந்த வாரம் மிகஅதிகமாக அதிகரித்துள்ளது. கடந்த வாரம் மட்டும் 32 பேர் விசர்நாய்க் கடிக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

விசர் நாய்த் தடுப்பூசி சாவகச்சேரி வைத்தியசாலையில் போதிய அளவு இல்லாத போதும் வேறு வைத்தியசாலைகளில் இருந்து பெற்றே இத்தடுப்பூசி ஏற்றப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (29)



சாவகச்சேரி - வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர் நவராத்திரி விழாவையொட்டி தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையே நடாத்திய சைவ சமய அறிவுத் தேர்வுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வின் போது - ஆலயக் குருக்களிடமிருந்து வெற்றியீட்டிய மாணவன் ஒருவன் பரிசில் பெறுவதைக் காணலாம். (31)

## கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 – 02 – 1928 |  | 17 – 11 – 2004 |

### அமரர் நல்லையா நடராசா

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க இயக்குநர்சபை உறுப்பினர் திரு.ந.உமாகரன் அவர்களின் தந்தையார் அமரர் நல்லையா நடராசா அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த கவலையடைகிறோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினர், சுற்றத்தவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

தெல்லிப்பழை.
17.11.2004.

தலைவர்,
பணிப்பாளர், பணியாளர்,
தெல்லிப்பழை ப.நோ.கூ.
சங்கம்.

(C/3372)


ராஜா யாழ்ப்பாணம்.



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த
அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
(ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே)
(சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்ரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி
(ரீல்ஸ்)



காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
ராஜ்கிரன், ரம்யாகிருஷ்ணன் நடித்த
அன்னை காளிகாம்பாள்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(சி-2723)

# இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் சமாதானத்துக்கு எதிரான மிகப்பெரிய சதி

## திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் சமாதானத்துக்கெதிரான மிகப்பெரிய சதி என திருகோண மலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது -

தமிழ் மக்களின் நியாயபூர்வ மான உரிமைகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்தை வற்புறுததி, அதற்கான பணியில் ஈடுபடுமாறு இந திய அரசாங்கத்தை தமிழீழ மக் கள் பல தடவைகள் கோரியுள்ளனர்.

தமிழ் மக்களது நியாயபூர்வ மான உரிமைகளைப் பெற்றுத் தரு வதற்கு, உரிய தார்மீகப் பொறுப்பு இந்திய அரசாங்கத்தைச் சார்ந்ததா கும் என வற்புறுத்திக் கேட்டுக் கொள் கிறோம்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யான பேச்சுவார்த்தை - இந்தியா வில் இடம்பெற வேண்டுமெனத் தமி ழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக் கொண்டபோதும், அந்தக் கோரிக் கைகளை இந்திய அரசாங்கம் தட் டிக்கழித்தது.

தற்போது இலங்கை அரசுக்கும் - இந்திய அரசுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம், தமிழீழ மக்களின் நல னுக்கு எதிரான ஒரு செயற்பாடா கும்.

தமிழீழ விடுலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையே சமாதான ஒப் பந்தம் கைச்சாத்திடப்படுவதற்குக் காரணமாக இருந்தது இராணுவ சம நிலையேயாகும்.

கைச்சாத்திடப்படவுள்ள பாது காப்பு ஒப்பந்தம் மூலம், அரசாங்கத் துக்கு இராணுவ வளங்களையும், விநியோகங்களையும், ஏனைய உதவிகளையும் வழங்குவதன்மூலம் அரசாங்கத்தின் இராணுவ பலத்தை உயர்த்த வழிவகுக்கும்.

இதன் எதிர் விளைவாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இரா ணுவ பலத்தை உயர்த்துவதற்கான வழிவகைகளைத் தேர்வுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இந்த நிலை ஏற்படுமானால், தற் போது அமுலிலுள்ள சமாதான உடன் படிக்கை பாதிக்கப்படும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

எனவே இந்திய பாதுகாப்பு ஒப் பந்தம் - தமிழ் மக்களுக்கெதிரான மிகப் பாரிய சதியென்றே கருது கிறோம்.

தமிழீழ பிரதேத்திலுள்ள பலாலி விமான நிலைய விஸ்தரிப்பும், அநுராதபுரம் - திருகோணமலை நெடுஞ்சாலை அமைப்பு வேலைக ளும், தமிழ் மக்களின் ஆலோசனை யுடன் செய்யப்படவேண்டியதே தவிர, தேசத்தால் தீர்மானிக்கப்பட வேண்டியதல்ல.

திருகோணமலைக்கும், வவுனியா வுக்கும் இடையேயுள்ள திருமலை ஹொரவப்பொத்தாணை - வவுனியா நெடுஞ்சாலை, பலவருடங்களாக இன்னும் திருத்தப்படாமல் வாய்க் கால் போல் காட்சியளிக்கிறது.

அரசாங்கத்துக்கு இது தெரிய வில்லையா? தமிழ் மக்கள் பிரயா ணம் செய்யும் முக்கிய பாதை இது என்பதற்காகவா இந்த நெடுஞ் சாலையை திருத்தாமல் உள்ளீர்கள்?.

இந்த நிலையில் திருகோண மலை - அநுராதபுரம் நெடுஞ்சாலை அமைப்பும், பலாலி விமான நிலைய விஸ்தரிப்பும் - ஏகாதிபத்திய வாதத் தின் ஒரு பகுதியே தவிர, தமிழ் மக்களின் நலன் சிறிது கூட இந்த விடயத்தில் இல்லையென்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, தமிழீழ மக்கள் நலனில் இந்திய அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால், இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக் கையை உடனடியாகக் கைவிட வேணடும்.

இல்லாவிடில், சமாதான ஒப்பந் தத்தைச் சீர்குலைத்து, தமிழ் மக்க ளுக்கு துரோகம் செய்த பழியை இந்தியா சுமக்க வேண்டி ஏற்படும். இந்திய அரசாங்கம் தமிழீழ மக்க ளுக்கு உதவி செய்யாவிடினும், துரோகம் செய்யக் கூடாதெனக் கேட் டுக் கொள்கிறோம் என அந்த அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(04)

### தென்னாபிரிக்க குழு இலங்கை வரவுள்ளது

தென்னாபிரிக்க விசேட பிரதிநிதி கள் குழு - இந்த மாதத்தில் இலங்கை வரவிருப்பதாகத் தெரிய வருகிறது.

தென்னாபிரிக்க பிரதிநிதிகளாக வரும் இந்த விசேட பிரதிநிதிகள் இலஙகையின் சமாதான நகர்வுகள் தொடாபாக உன்னிப்பாக நில வரங்களை அவதானிப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த விசேட குழுவினர் கடந்த காலத்தில் சமாதானத்துக்கு மிகப் பெரும் பங்காற்றியும் இருந்தனர். அத்துடன் வடக்கு - கிழக்குப் பிர தேசத்துக்குப் பயணம் செய்து நிலமை களை நேரில் பார்வையிடவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

### தரம் 9 மாணவர்களுக்கான பரீட்சை ஒத்திவைப்பு

யாழ். வலயத்தில் தரம் 9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வியா ழக்கிழமை நடைபெறவிருந்த ஆங் கிலம், சுகாதாரப் பரீட்சைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் எனவும், யாழ். வலயத்தில் உள்ள பாட சாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சையில் தரம் 7, 8, 10 மாண வர்களுக்கான சமுகக்கல்விப் பரீட்சை டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி நடை பெறும் எனவும் யாழ். வலயக் கல் விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# சமாதான பேச்சுக்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

## ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)



அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமாயின் - எவ்வித நிபந்தனைகளும் இன்றி, அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது அத்தியாவசியமானது. எனினும், சமா தானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் காணப்படுகின்ற சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டும்.

அதேபோல் எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதிக்கிடையில் ஏற்படு கின்ற இணக்கப்பாட்டுக்கு ஏற்றதாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச செல்லவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சூறாவளி பற்றிய எச்சரிக்கை முன்கூட்டியே வழங்கப்படும்

## வளிமண்டலத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் ஏற்படக் கூடிய சூறாவளி குறித்து, உறுதி யான எதிர்வுகூறலை - சூறாவளி ஏற்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பே பொதுமக்களுக்கு வழங்கு வதற்கு, வானிலை ஆய்வுததிணைக் களம் நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளதாக, வானிலை ஆய்வுத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் ஆர்.அபேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நாடு முழுவதும் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பான விப ரங்களைத் தெரிந்து கொள்வதற்கு, தேவையான செய்மதித் தொழில் நுட்பமுறைகள் அனைத்தும் தற் போது தயார் செய்யப்பட்டுள்ளன.

இந்திய வானிலை ஆய்வுத் திணைக்களத்துடன் இணைந்து, விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வானிலை ஆய்வுத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அம்பாறை, திருகோணமலை மட்டக்களப்பு, பொத்துவில் போன்ற பகுதிகள் சூறாவளியால் பெருமளவு பாதிப்புக்குள்ளாகலாம்.

சூறாவளி ஏற்படும் நேரம் மின் தடைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக் கள் உள்ளன.

எனவே, இந்த நேரம் வானிலை ஆய்வு நிலையம் பொதுமக்களுக் கெனத் தெரிவிக்கும் தகவல்கள் அவர்களுக்கு கிடைக்காமல் போகும் சாத்தியமுள்ளதால், பற்றரியில் இயங்கும் வானொலிப்பெட்டிகளை மக்கள் தயார் நிலையில் வைத் திருக்கவேண்டும்.

சூறாவளியின் விபரங்கள் மற் றும் அது மீண்டும் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாக வானிலை அவ தானநிலையம் தெரிவிக்கும் அறிக்கைகளை மக்கள் கவனத் திலெடுத்து, உரியபாதுகாப்பு நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண் டும்.

வானிலை ஆய்வுத் திணைக்களத தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் செய்மதிப்புகைப்படங்கள், செய் மதித் தகவல்கள் மூலம் மக்க ளுக்கு சரியான விபரங்களை வழங் குதற்கு வானிலை ஆய்வுத்திணைக் களம் நடவடிக்கைகளை மேற்கொண டுள்ளது எனத் தெரிவித்தார்.

(தே)

# ரயில்வே திணைக்கள ஊழியரின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

ரயில்வே தொழில்நுட்ப ஊழியர் உட்பட, பல பிரிவினரது சம்பள அதிகரிப்பிற்கு அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா உடன்பட்டுள்ளமையால், ரயில்வே திணைக்கள ஊழியர்கள் மேற்கொள்ளவிருந்த வேலைநிறுத் தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சா பீலிக்ஸ பெரேராவுக்கும், ரயில்வே திணைக் கள ஊழியர் முன்னணியினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் அமைச்சு செயலகத்தில் நடந்த கலந்துரை யாடலின்போதே இந்த இணக்கம் காணப்பட்டதாக, முன்னணியின் அமைப்பாளர் சம்பத் பெரேரா தெரி வித்தார்.

சம்பள முரண்பாடுகள் உள்ள அனைத்துப் பிரிவு ஊழியர்களதும் சிக்கல்களை தான் தீர்ப்பதாகவும், தற்போது இது குறித்து அமைச்சர வைக்கும் விபரங்களை அறிவித்துள்ள தாகவும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். (தே)

# மாவனல்ல ஆயுத வியாபாரத்துடன் பிரபல அரசியல்வாதிக்கு தொடர்பு

(கொழும்பு)

மாவனல்ல பகுதியில் பரவலாக ஆயுத வியாபாரம் களைகட்டியுள்ள தாகத் தெரியவருகிறது.

மாவனல்லவில் பிரபல வர்த்தகர் கள் தற்போது வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்து, பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விற்று வருவதாகவும், கங்குல என்ற இடத்திலிருந்து ஆயுதங்களை விற்ற ஒருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டார் எனவும், இந்த ஆயு தங்களைக் குழுக்களாகச் சேர்ந்து விற்பதாகவும் தெரியவருகிறது.

இந்தப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட வரிடமிருந்து நவீனரக கைக்கமரா பொருத்திய கைத்தொலைபேசியும், பல லட்சம் ரூபா பணமும் மீட் கப்பட்டது.

கைத்துப்பாக்கிகள் இலங்கைப் பெறுமதியில் ஆறு லட்சம் ரூபாய்க ளுக்கு மாவனல்லவில் விற்கப்படுவ தாகவும், வியாபாரத்தில் முஸலிம் வர்த்தகர்கள் ஈடுபடுவதாகவும் தெரிய வருகிறது.

மிக முக்கிய அரசியல்வாதியின் பின்னணியில் இவை நடைபெறுவ தாகவும், சமாதானப் பேச்சுவார்த் தையில் இந்த அரசியல்வாதியே தனித் தரப்புக் கோரிக்கை விடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பயிற்சிபெறாத ஆசிரியர்கள் இலங்கையிலேயே அதிகம்

(கொழும்பு)

உலகிலேயே அதிகமாகப் பயிற்சிபெறாத ஆசிரியர்கள் இருக்கும் நாடாக இலங்கை அமைந்துள்ளதாக உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த அறிக்கையின்படி இலங்கையிலுள்ள ஆசிரியர்களில் 42 வீதமானோர் போதிய பயிற்சிகளைப் பெறாத ஆசிரியர்கள் சேவையி லுள்ளனர்.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் பின்பற்றிய கல்விக் கொள்கை யினாலேயே இது ஏற்பட்டுள்ளதாக லங்கா குருசேவா சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் 13 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்பட்டது. அதைவிட இயங்கிக் கொண் டிருந்த 12 ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கும் போதிய நிதியுதவி வழங்கப்பட வில்லை என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்கும் காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோத ஆயு தங்கள் வைத்திருப்பவர்களுக்கு அரசாங்கத்தால் பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்குரிய பலன் கிடைக்காததை அடுத்து, பொதுமன்னிப்புக் காலம் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் சட்டம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு -சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருப்பவர்க ளுக்கு, பொதுமன்னிப்பும் சன்மான மும் வழங்கப்படுமென அறிவித்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஏற்கனவே கால அவகாசம் வழங்கி யிருந்தது.

ஏற்கனவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டு ஒன்றரை மாதங்கள் கடந்துவிட்டபோதிலும், இதுவரை 1337 ஆயுதங்கள் தான் மீள ஒப் படைக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் தகவலின்படி 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரை சட்டவிரோத ஆயுதங்கள் இருப்ப தாகக் கருதப்படுகிறது.

இது தொடர்பாக அமைச்சு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ள அறிவித்தலில் -

ஆயுதங்களை ஒப்படைப்பவர்க ளிடம் எப்படிக் கிடைத்தது உட்பட, எந்தவித கேள்விகளும் கேட்க வேண்டாம் என்றும், ரி- 56 ரக துப்பாக்கி ஒன்றுக்கு 500 ரூபா என சன்மானம் வழங்குமாறும் உத்தர விடப்பட்டுள்ளது. (தே)

# வரவு -செலவுத் திட்டத்துக்கு முன் விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி தலைமையிலான அரசாங்கத் தின் முதலாவது வரவு -செலவுத் திட்டத்தை, நாடாளுமன்றில் சமர்ப் பிபபதற்கு முன்னர் - விசேட அமைச் சரவைக் கூட்டமொன்று இன்று நடை பெறவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெய ராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரி வித்தார்.

இன்று பிற்பகல் 2-30 மணிக்கு வரவு-செலவுத் திட்ட யோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள் ளன. இன்றையதினம் காலை பத்து மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா தலை மையில் விசேட அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடை பெறும் இந்தக் கூட்டத்தில், வரவு- செலவுத்திட்ட யோசனைகள் ஆராயப படவுள்ளன. அத்துடன் இந்தக் கூட் டத்தில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசுந்தரவும் கலந்து கொள்வார். (தே)

## இந்திய சபைத் தலைவருடனான

# மூன்று நாள் பயிற்சி ஆட்டத்தை தென்னாபிரிக்கா சமன் செய்தது


ஹேமங் பதானி

இந்திய சபைத் தலைவர் அணிக்கெதிராக தென்னாபிரிக்க அணியின் பயிற்சி ஆட்டம சமநிலையில் முடிவடைந்தது. மூன்று நாள் ஆட்டமாக நடந்த இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்கா 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து ஆடிய இந்திய சபைத் தலைவர் அணி 361 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது

இந்தப் போட்டியில் தினேஸ் மொங்கியா 148 ஓட்டங்களை விளாசினார். தேசிய அணியில் மிண்டும் இடம்பிடிக்கும் நோக்கில் உள்ள பதானி கடைசிவரை ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களை எடுத்தார்.

135 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தென்னாபிரிக்கா 2 ஆவது இனிங்ஸ் ஆட்டத்தைத் தொங்கியது. 108 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து தவித்த தென்னாபிரிக்க அணிக்கு கடைசிக்கட்ட வீரர்கள் கைகொடுத்தனர். இல்லையென்றால் இந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா தோல்வி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும். ஆட்டமுடிவில் தென்னாபிரிக்கா 172 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்தது.

இதனால் இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. சுழற்பந்துவீச்சாளர் ரமேஸ் பவார் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

நேற்றைய போட்டியில் தென்னாபிரிக்காவின் நம்பிக்கை நாயகன் கலிஸ் கடைசிக் கட்டத்தில் ஆடவந்தார். இரண்டாவது நாள் ஆட்டத்தின்போது கலிஸ் காயமடைந்தார். இதனால் அவரால் பந்துவீச் முடியவில்லை. போதிய உடற்தகுதி பெறாத பட்சத்தில் கலிஸ் இந்தியாவுடனான முதல் டெஸ்ட் போட்டியில் ஆடுவது சந்தேகம்.

முதல் டெஸ்ட் போட்டிக்கு இன்னும் 2 நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் தென்னாபிரிக்க அணி முன்னணி வீரரை இழந்து தவிக்கிறது. ஏற்கனவே தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் மற்றும் போயே ஆகிய நட்சத்திர வீரர்கள் இடம்பிடிக்கவில்லை. இந்த நிலையில் தென்னாபிரிக்க அணியின் சோதனை இரட்டிப்பாகியுள்ளது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ் மாவட்டப் பிரிவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று தொடக்கம் 24 ஆம் திகதிவரை தினமும் 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன்றைய ஆட்டமாக யங் கென்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் பீற்றேஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (12)

## காரை அன்பளிப்பாக வழங்கிய ஷரபோவா

அமெரிக்க லொஸ் ஏஞ்சல் நகரில் நடைபெற்ற டபிள்யூ.ஏ.ரி. கிண்ணத்துக்கான ரெனிஸ் போட்டியில் பட்டம் வென்ற ஷரபோவாவுக்கு சம்பியன் கிண்ணத்துடன் 69 லட்சம் மதிப்புள்ள காரும் பரிசாக வழங்கப்பட்டது.

ஆனால், இந்தக்காரை ரஷ்யாவில் பெஸ்லான் பாடசாலையில் கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த 344 பேரின் குடும்பங்களில் உதவி தேவைப்படுவோருக்கு வழங்குவதாக அறிவித்துள்ளார் ஷரபோவா.

## பந்தை எறிவதாக

# ஹர்பஜன், முரளி உட்பட 7 பேர் மீது ஐ.சி.சி.சந்தேகம் தெரிவிப்பு!

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் ஹர்பஜன் சிங். இவரது பந்துவீச்சு எறியும் வகையில் உள்ளது என்று கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டு, பின்னர் அவரது பந்துவீச்சு சரி செய்யப்பட்டது.

இந்த நிலையில் சர்வதேச அளவில் 7 பந்து வீச்சாளர்களின் பந்துவீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக ஐ.சி.சி.யின் சிறப்பு துணைக்குழு அறிவித்துள்ளது. இந்த 7 பேரில் ஹர்பஜன்சிங்கும் ஒருவர்.

இதேபோல பாகிஸ்தானைச் சேர்ந்த சொகைப் அக்தர், சொகைப் மலிக், இலங்கையைச் சேர்ந்த முரளிதரன், சமிந்த வாஸ், மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த லாசன், பங்களாதேஷைச் சேர்ந்த சன்வார் ஹிசைன் ஆகியோரது பந்துவீச்சும் எறிவதாகவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா; இங்கிலாந்து, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, கென்யா, ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டு இல்லை. குற்றச்சாட்டுக் கூறப்பட்டவர்களின் பந்துவீச்சு கண்காணிக்கப்படும் என்று ஐ.சி.சி. தெரிவித்ததாக அவுஸ்ரேலிய பத்திரிகை தெரிவித்துள்ளது.

## சர்வதேச ஒருநாள் போட்டிக்கான

# தரவரிசைப் பட்டியலில் இந்தியா பின்தள்ளப்பட்டது

(லண்டன்)

ஐ.சி.சி ஒரு நாள்போட்டிக்கான தர வரிசைப் பட்டியலில் இந்திய அணி எட்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டது.

கொல்கத்தா போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்தது. இதை அடுத்து இரண்டு புள்ளிகள் குறைய ஏழாவது இடத்தில் (102 புள்ளி) இருந்து எட்டாவது இடத்துக்கு (100 புள்ளி) பின்தள்ளப்பட்டது.

இப்போது பட்டியலில் இந்தியாவுக்கு கீழ் சிம்பாப்வே, கென்யா, பங்களாதேஷ் போன்ற மிகவும் பலம் குன்றிய அணிகளே உள்ளன. 101 புள்ளிகளுடன் தென் ஆபிரிக்கா ஏழாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. பாகிஸ்தான் 109 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை தக்கவைத்துக்கொண்டது.

நேற்றுமுன்தினம் வெளியான சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசை குறித்த விபரம் வருமாறு.

| | |
|---|---|
| 1 | அவுஸ்ரேலியா - 137 |
| 2 | இலங்கை - 119 |
| 3 | நியூஸிலாந்து - 117 |
| 4 | பாகிஸ்தான் - 109 |
| 5 | மேற்கிந்தியத் தீவு - 107 |
| 6 | இங்கிலாந்து - 107 |
| 7 | தென்னாபிரிக்கா - 101 |
| 8 | இந்தியா - 100 |
| 9 | சிம்பாப்வே - 59 |
| 10 | கென்யா - 26 |
| 11 | பங்களாதேஷ் - 0 |

# விளையாட்டு

# இந்திய அணித் தலைவர் கங்கூலியை மாற்றவேண்டிய தேவையில்லை!

## வசீம் அக்ரம் தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் கங்கூலியை மாற்றத் தேவை இல்லை என்று பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி தோற்றதைத் தொடர்ந்து கப்டன் பதவியில் இருந்து கங்குலியை நீக்கிவிட்டு வேறு யாராவது அந்தப் பணிக்கு வந்தால்தான் இந்திய அணியின் திறன் மேம்படும் என்று அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் மார்க்வோ கருத்து தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் மார்க்வோவின் கருத்தை மறுக்கும் வகையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக பெங்களூரில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது சக்தி குறைந்தது போல் தோன்றுகிறது. இது உலகில் உள்ள எல்லா அணிகளுக்கும் ஏற்படுவதுதான். அதற்காக அணியை முழுமையாக மாற்றிவிட முயற்சிப்பது நல்லதல்ல இதனால் நிலைமை மேலும் மோசமாகிப் போய்விடும்.

கங்கூலிக்கு இப்போது 31 அல்லது 32 வயது இருக்கலாம். இன்னும் சில ஆண்டுகள் அவர் முதல்தர போட்டிகளில் ஆட முடியும். நல்லதிறமையும், அனுபவமும் உள்ளவரை இப்போது விலக்கினால் நஷ்டம் அணிக்குத் தானே தவிர, அவருக்கு அல்ல. எனவே கப்டனாக கங்கூலியே நீடிக்கவேண்டும்.

கங்குகூலியை மட்டுமல்ல அணியின் பெரும்பாலான வீரர்களை மாற்றக்கூடாது என்றே நினைக்கிறேன். தற்போது அணியில் இருப்பவர்கள் எல்லாம் திறமையும், அனுபவமும் உள்ளவர்கள். அத்தோடு ஒரே அணியாக பல காலம் ஆடியவர்கள். அவர்களின் கூட்டைக் கலைப்பது சரியாகாது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் என்பது எனது கணிப்பு. இந்திய அணியுடன் ஒப்பிடுகையில் தென்னாபிரிக்கா வலுவானது அல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

# அவுஸ்ரேலிய பயணத்திலிருந்து மொயின்கான் நீக்கப்பட்டார்!

அவுஸ்ரேலிய பயணத்துக்கான பாகிஸ்தான் அணியில் விக்கெட் காப்பாளர் மொயின் கான் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தப்பயணத்திற்கான பாகிஸ்தான் முதல்கட்ட அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. 25 பேர்கொண்ட இந்தப்பட்டியலில் அனுபவம் மிக்க மொயின் கான் மற்றும் லத்தீப் ஆகியோர் இடம்பிடிக்கவில்லை. தேர்வு செய்யப்பட்டுள்ள வீரர்களிடம் எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் 3 நாட்கள் உடற்தகுதிப் பரிசோதனை நடக்கவுள்ளது. இதன்பின்னர் வரும் 27 ஆம் திகதி பாகிஸ்தான் அணி அவுஸ்ரேலியா செல்கிறது. முத்தரப்பு ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலியா - பாகிஸ்தான்- மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகள் மோதுகின்றன.

தேர்வு செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் வீரர்களின் விபரம் வருமாறு.

சல்மான் பட், தாபீக் உமர், இம்ரான் பர்கத், மலிக், யுகானா, இன்சமாம் உல் ஹக், அப்துல் ரசாக், கம்ரன் அக்மல், தனீஷ் கனேரியா, ஷபீர் அகமது, அக்தர், முகமட் சமி, ராணா நவீத், அப்ரிடி, ஆசிம் கமல், அமீர்பஷீர், ரியாஸ் அப்ரிடி, பஷீத் கான், மிஸ்பா உல் - ஹக், வைசல் இக்பால், ஜாய்தி, யாஷீர் ஹமீத், யூனுஸ்கான், பைசல் அக்தர், முகமது கலீல்.

# அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ழல் பிளமிங் விளையாடுவது சந்தேகம்



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிராக நடக்கும் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து கப்டன் பிளமிங் ஆடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட போட்டி மெல்பேர்ன் நகரில் இன்று தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் நியூஸிலாந்து கப்டன் பிளமிங் ஆடுவது சந்தேகமாக உள்ளது. காயம் காரணமாக அவதிப்பட்டுவரும் பிளமிங் இன்னும் குணமடையவில்லை.

எனவே, அவருக்குப் பதிலாக அனுபவம் மிக்க மக்மிலன் அணியில் சேர்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னணி வீரர் ஆஸ்லேவும் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். மோசமாக ஆடிய காரணத்தால் மக்மிலன் கடந்த ஜுன் மாதத்துக்குப் பின்னர் டெஸ்ட் அணியில் இடம் பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை யுத்தம் வருமானால் அதற்கும் நாம் தயார்

## வலி.மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு

(யாழ்ப்பாணம்)

**எமது தேசியத் தலைவரும் போரை விரும்பவில்லை. போர் எம்மீது திணிக்கப் பட்டது. அந்தப்போரிலிருந்து மக்களைக் காப்பாற்றவேண்டும். எமது மண்ணை மீட்டெடுத்து, சுதந்திரமாக வாழவேண்டும். தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலையிலேதான் தலைவரும் போரை எதிர்கொண்டார். தோல்வி களைவிட வெற்றிகள் பல கண்டார். போரின் ஆரம்ப காலத்தில் பத்துப் போராளி களுக்கு ஒரு துப்பாக்கி என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று ஒரு போராளிக்குப் பத்துத் துப்பாக்கி என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எமது மக்கள் போரை விரும்பா விட்டாலும், போர் என்ற நிலை வந்தால் அதனை எதிர்கொண்டு, வெற்றி கொள்ளவும் நாம் தயார் என்று வலி.மேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு தெரிவித்தார்.**

சங்கானை தெற்கு பொது அமைப்புக்களுடன் மாவீரர் நினைவு நாள் பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவர் இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தனது உரை யில் -

ஒரு போராளி தமிழ் மக்களின் விடுதலைக் காகப் பெற்றோரை மறந்தான். சகோதர, சகோதரிகளை மறந்தான், உற்றார் உறவினர்களை மறந்தான். ஓடி விளையாடி கூடிக் குலாவிய நண்பர்களை மறந்தான். இவை எல்லாவற்றையும் மறந்தவன் தன் மண்ணை மறக்கவில்லை, விடுதலையை மறக்கவில்லை, எமது மக்களின் சுதந்திரத்தை மறக்கவில்லை. அதறகாகப் போரா டினான். மாவீரர் ஆனான்.

இன்று வரை 18 ஆயிரம் இன்னுயிர்கள் மாவீரன எனும் கௌரவத்தோடு தமிழீழ மண் ணில் விதைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கனவு நனவாக வேண்டும். விதை கள் வேரூன்றி மரமாகி, விருட்ச மாக வேண்டும். சுதந்திரத் தாயகம் தம் மக்களுக்குக் கிடைக்க வேண் டும். எந்தவொரு மாவீரனும் தன் னைக் கௌரவிக்க வேண்டும் என்ற நினைவில் மாவீரனாகவில்லை. அவனது நினைவெல்லாம் தமிழ் மக்களின் விடிவைப் பற்றித்தான் இருந்தது. மக்களுக்காக மடிந்தான்-எமக்காக மடிந்தான். நாம் அவனுக் குக் கொடுக்கும் கௌரவம்தான் என்ன? அதற்காகவே எமது தேசி யத் தலைவர் மாவீரர் நாளைக் கொண்டு அவர்களைக் கௌரவிக்க வழி சமைத்துக் கொடுத்துள்ளார்.

இலங்கை இராணுவப் படையி லும் சரி, இந்திய இராணுவர் படை யிலும் சரி, அவர்களிடம் இல்லாத பலம் ஒன்றை எமது ஒவ்வொரு போராளிகளும் கொண்டிருந்தார் கள். இராணுவப் பலம், ஆயுத பலம், பண பலம், சர்வதேசத்தின் உதவிப் பலம் எல்லாம் இருந்தும், அவர்களி டம் இல்லாதிருந்த மனோபலம் மட்டும் எமது போராளிகளிடம் இருந் தது. அந்த மனோபலம் தான் இன்று எமக்குப் பல வெற்றிகளைத் தந்துள்ளது.

இந்த வெற்றிகளின் பின்னே எத்தனையோ மாவீரர்கள் மண்ணுக் காகத் தம் உயிரை நீத்துள்ளார் கள். இவர்களை நாம் நினைவு கூரவேண்டும். அவர்களை ஈன்ற பெற்றோரை நாம் கௌர விக்க வேண்டும். மாவீரர் நாளிலே ஒவ் வொரு வீட்டிலும் தீபங்கள் ஏற்றி, அவர்களை கௌரவித்து, அவர்க ளின் தியாகத்தை நினைவு கூர வேண்டும்.

இன்று இந்தியா வுடன் பாது காப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய் வதற்கு சென்றிருந்த ஜனாதிபதி வெறுங்கையுடன் திரும்பி யுள்ளார். இந்தப் பாதுகாப்பான ஒப்பந்தமா னது தமிழ் மக்களுக்கு சாவு மணி அடிப்பதற்கான அத்திவாரமாகும். தற்போதுள்ள புரிந்துணர்வு ஒப்பந் தத்தின் படி இராணுவச் சமநிலை இந்தத் ஒப்பந்தத் தால் மாற்ற மடையக்கூடிய நிலை ஏற்படும். இராணுவச் சமநிலை பலம் குன் றிப் போனால் எமது எதிர்காலம் கேள் விக்குறி யாகிவிடும்.

இந்தி யாவின் இராணுவப் பலத்துடன் எம்மை அச்சுறுத்தும் நடவடிக்கையே இலங்கை - இந்தி யப் பாதுகாப்பு ஒப்பந்தம். தமிழ் மக்களுக்கெதிரான இந்த ஒப்பந் தம், இந்தியத் தமிழ் நாட்டு அரசி யல் தலைவர்களின் எதிர்ப்பால் கைச்சாத்திடுவது தள்ளி வைக்கப் பட்டுள்ளது. இந்திய அரசு தமிழ் மக்களின் மனோநிலையை கடு களவாவது சிந்தித்திருக்கிறது. என்றாலும் இது நீண்ட காலத்திற்கு நீடிக்காது. என்றோ இந்த ஒப்பந்தம் கைச்சாத்தடப்படக்கூடிய நிலையை இலஙகை அரசு ஏற்படுத்தாமல் விடாது எனத் தெரிவித்தார். (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

## அங்கவீனர்களுக்கு உதவி

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலய மும, ஜெயப்பூர் செயற்கை உறுப புக்களை பொருத்தும் நிறுவன மும் இணைந்து யாழ்.குடாநாட் டில் போரினால் பாதிக்கப்பட்டு அங்கங்களை இழந்தோருக்கான மறுவாழ்வு நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு கை, கால் இழந்தவர்களில வசதி வாய்ப்பு இல்லாது செயற்கை உறுப்புக்களைப் பொருத்த பின் தங்கிய பிரதேச வாழ் மக்களை நேரடியாக சந்தித்து அவர்களுக் குரிய செயற்கை உறுப்புக்களை வழங்கி வருகின்றன.

இந்த நடவடிக்கை மூலம் வடம ராட்சி, தென்மராட்சி வாழ் வலு விழந்த மக்கள் அதிகம் பயன டைந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (17)

## மாவீரர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் சிரமதானம்

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களையும் சேர்ந்த பாட சாலைகளில் இந்த முறை மாவீரர் தினத்தை முன்னிட்டு மாணவர்க ளால் பாடசாலை சுற்றாடல் சிரம தானம் மூலம் துப்புரவு செய்யப்பட வுள்ளன.

இந்தச் சிரமதானப் பணிகள் ஆசிரியர்களின் வழிநடத்தலில் மாணவர்கள் மேற்கொள்கின்றனர். இதேவேளை, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி கற்று வெளியேறிய மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு அந்தந்தப் பாடசாலை களில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

வலிகாமம் கல்வி வலயத்திற் குட்பட்ட தரம் 6 தொடக்கம் 9 வரை வகுப்புக்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வலு வூட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 20 , 21 ஆம் திகதிகளில் காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 வரை சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றத் தெரிவு செய்த ஆசிரியர் களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (101)

## நற்செய்தி அறிவிப்பு விழா

நல்லூர் சென்ஜேம்ஸ் ஆலய வாரியர் சங்கம் நடத்தும் நற் செய்தி அறிவிப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு சுண்டுக்குளி கல் லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

நடன, நாடக நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக சென் ஜேம்ஸ் ஆலய வாலிப சங்கத்தினர் தெரி வித்துள்ளனர். (91)

## மின்னல் தாக்கி மின் உபகரணம் சேதம்

அண்மையில் பெய்த கடும் மழைக் காரணமாக ஏற்பட்ட பாரிய இடிமின்னலால் சாவகச்சேரி நுணாவில் பகுதிகளில் தொலைக் காட்சி, வானொலி உட்பட பல மின் உபகரணங்கள் சேதமடைந் தன. இதன்போது சில வீடுகளில் மின் சாரமும் நீண்ட நேரமாகத் தடைப் பட்டிருந்தது.

## புதிய கிராம அலுவலர்

மீசாலை மேற்கு ஜே 319 கிராம அலுவலர் பிரிவுக்குப் புதிய கிராம அலுவலர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரிவில் கடமையாற்றிய கிராம அலுவலர் அ.அம்பலவா ணர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள மையால், அவரின் இடத்துக்கு பூநகரி - நல்லூர் இல 59 பிரிவில் கடமையாற்றிய க.ஞானேஸ்வரன் கடந்த 23 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

# உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்க பொதுக்கூட்டத் தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் 24.10.2004 ஆம் திக திய நிர்வாக சபைக்கூட்டத் தீர் மானத்தின படி சங்கத்தின் பொதுக் கூட்டத்தை விரைவில் கூட்ட உள்ள தாகவும், பொதுக் கூட்டத்தின் போது சங்கமுரசு என்னும் மலர் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும், மலரின் உள்ளடக்கக் கூடிய விட யங்களை சங்கத்தின் அங்கத்தவர் களாக இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளவர்களிடமும் தற் பொழுது சேவையில் உள்ள சேவைமூப்புள்ள அங்கத்தவர்களி டமும் கோரி உள்ளதாகவும் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத் தலைவர் ச.பரமேஸ்வரன், பொதுச் செயலாளர் செ.சந்திரசேகரம் ஆகியோர் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிய சங்க அங்கத் தவர்களான பலர் மாகாண சேவை யின் மற்றும் திணைக் களங்க ளுக்கு 2004 ஆம் ஆண்டு ஜுன் முதல் இடமாற்றப்பட்டுள்ளதால் சங்க யாப்பில் மாநகர, நகர, பிரதேச சபைகளில் கடமையாற் றும் எழுதுவினைஞர்கள் என்பதை வடக்கு - கிழக்கு மாகாண சேவை எழுதுவினைஞர்கள் எனவும், சங்கத்தின் உள்ளூராட்சி எழுது வினைஞர் சங்கம் என்னும் பெயரை வடக்கு - கிழக்கு மாகாண சேவை எழுதுவினைஞர் சங்கம் எனவும் பெயர் மாற்றம் செய்ய உள்ளதாக வும் இந்தக் கூட்டத்தில் ஏக மன தாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : சி.ஜனுசியா
முகவரி : குருநகர்.




அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்ட வல் வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி க.மயி லேறும் பெருமான் சாவகச்சேரி நீதிபதி சு.ப.சுப்பிமணியம் முன்னி லையில் சத்தியப்பிரமாணம் செய்வதைப் படத்தில் காணலாம். (17)

# சுவிஸ் திரைப்படத்தின் நாளைய காட்சி



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் சுவிஸ் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இயக்குநர் டெனிஸ் ரபாக் வியலின் AZZURROU எனும் திரைப் படம் காண்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கதைச் சுருக்கம் வருமாறு -

75 வயது முதியவரான கிஸிப்பி இத்தாலியில் வாழ்ந்து வருகின்றார். அவருடைய 7 வயதான பேத்தி பார்வையற்றவளாக இருந்து வருவ துடன், அவளுக்கு மீண்டும் பார்வையை ஏற்படுத்துவதற்கு மிகவும் செலவு கூடிய விழித்திரை சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கிஸிப்பி முன்னர் பல வருட காலம் சுவிட்சர்லாந்தில் போயர் கம்பெனியில் ஒரு வெளிநாட்டுத் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். அதன் காரணமாக அந்த நாட்டுக்கு மீண்டும் செல்வ தற்கு அவர் தீர்மானிக்கின்றார்.

அவர் முன்னர் அந்தக் கம்பெனியில் வேலை செய்த போது ஒரு புதிய கண்டுபிடிப்பை செய்திருந்ததுடன், அந்தக் கண்டுபிடிப்பைத் தனது கம்பெனியின் உரிமையாளருக்கு இலவசமாக வழங்கியிருந்தார். இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் சம்பாதிக்கப்பட்டிருக்கும் பணத்தில் தனக்குச் சேர வேண்டிய பாகத்தை முதலாளியிடம் கேட்டுப் பெறவேண்டும என்பதே அவருடைய எண்ணமாகும். ஆனால், கிஸிப்பி சுவிட்சர்லாந்துக்கு வந்த போது தான் முன்னர் வேலை செய்த கம்பெனி மூடப்பட்டிருப் பதையும், அதன் உரிமையாளர் மன நோயினால் பாதிக்கப்பட்டு மன நோய் மருத்துவனையொன்றில் இருப்பதையும் கண்டறிகின்றார்.

சுவிட்சர்லாந்தில் முன்னைய வாழ்க்கை குறித்த அனுபவங்களை அசை போடும் கிஸிப்பி, அந்த நாட்டில் வெளிநாட்டுத் தொழிலாளர் கள் மிகமோசமான முறையில் சுரண்டப்பட்டு வந்திருப்பதை உணரு கின்றார்.

ஆனால், அவர் சுவிட்சர்லாந்தை விட்டுச் செல்வதற்கு வழிகோலிய உண்மையான காரணம் உரிமையாளரின் மனைவியுடன் அவருக்கிருந்த தொடர்பாகும், அதன் மூலம் ஒரு மகனுக்கு அவர் தந்தையாகியிருந்தார். இப்பொழுது அந்தக் கம்பனியில் எஞ்சியிருக்கும் வியாபாரத்தை அந்த மகன் நடத்தி வருகின்றான் என்பதாகும்.

# சுயதொழில் முயற்சிக்கு மூவிமொண்டோ உதவி

யாழ். குடாநாட்டில் உள்ள சுய தொழில் முயற்சியாளர்களுக்கான ஊக்குவிப்புக்களையும் உதவி களையும் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத் துவதற்கான நடவடிக்கைகளை இத்தாலி நாட்டைச் சேர்ந்த தொழில் அமைப்பான மூவிமொண்டோ நிறு வனம் எடுத்துள்ளது.

இதன் ஒரு அங்கமாக யாழ். குடாநாட்டிலுள்ள கால் நடை வளர்ப்பவர்கள் 450 பேருக்கு கால் நடை வளர்ப்புக்கான உபகரணங் கள், உதவிப் பொருட்கள் என்பன வற்றை வழங்கிவருகிறது.

யுத்த அனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்க ளுடன் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்க ளின் பொருளாதார நிலமையை மேம்படுத்துவதே இதன் நோக்க மாகும். (17)



பொருண்மியம்

# தாயகப் பகுதி நீர்ப்பாசனப்புனரமைப்புகள் நடைமுறைச் சாத்தியமாய் இருக்கவேண்டும்

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தமிழர் தாயகப் பகுதி – நீர்ப்பாசனப் புனரமைப்புக்காக அரசு நிதி ஒதுக்காத காரணத்தால் இன்று மிகப் பெரும் நிதி உதவி எதிர்பார்க்கப்பட்டுள்ளது. குறித்தகாலத்தில் இதனைச் செய்துதந்திருந்தால், இப்படிப்பட்ட பெருநிதி தேவையான நிலை ஏற்பட்டிருக்காது.

உலக வங்கியின் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்புகள் நடைபெற்றாலும்கூட, அது பாரிய நீர்ப்பாசனக் குளங்களுக்கு வழுங்கப்படவில்லை. நியாப் திட்டம் இரண்டில்தான் முதற்தடவையாக பாரிய நீர்ப்பாசனக் குளம் ஒன்றின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்துக்குத்தான் அது ஒதுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை நீர்ப்பாசனத்திட்ட வரைவுகள் ஆக்கபூர்வமாக இருக்கின்றது. ஆனால் அதற்கான போதிய நிதி இல்லாத நிலைமை காணப்படுகிறது. அதனால் சர்வதேச நிதி நிறுவனங்களிடம் கையேந்தவேண்டிய நிலையுள்ளது. காரணம் –

அரசு எந்த நிதியையும் இன்றுவரை வழங்காத நிலைமையாகும். இரணைமடுவைப் பொறுத்தவரை அது வன்னியின் மிகப்பெரிய நீர்த்தேக்கம். அதில்தான் கிளிநொச்சியின் இருப்புத் தங்கியுள்ளது. கிளிநொச்சியில், நெல்லுக்கும், புதிதாகக் குடிநீருக்கும் யாழ்ப்பாணம் தங்கியிருக்கும் நிலைமை காணப்படுகிறது. இரணைமடுவின் அணை பலவீனமாகவுள்ளது. அது பலப்படுத்தப்பட்டு, புனரமைக்கப்பட்டு அதன் வாய்க்கால்கள் சீராக்கப்பட்டால்தான், இரணைமடு தன் முழுக்கொள்ளளவு நீரைத் தேக்கிப் பயனளிக்கமுடியும். இரணைமடுவின் முழுப் புனரமைப்புக்கு 2800 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. நியாப் 21,000 மில்லியன் ரூபாக்களை மட்டும் வழங்கியுள்ளது. உண்மையில் நியாப் சிறுகுளங்களுக்குரியதாகும். ஆகவே அது இரணைமடுவுக்கு நிதி ஒதுக்கியிருப்பது பெரிய விடயம். இதன்மூலம் குளத்தைப் பலப்படுத்தி, அதன் முழுக் கொள்ளளவு நீரைத் தேக்குவதுதான் நடைமுறைப் படுத்துவதாகும்.

இரணைமடுவைப் பொறுத்தவரை அதன் கொள்ளளவைவிட, பருவ மழைக் காலத்தில் வெளியேற்றி கடலில் கலக்கவிடும் நீர் அதிகமாகும். இதனால் இரணைமடுவுக்குத் தெற்காக அதற்கு நீர்வழுங்கும் கனகராயன் ஆற்றுக்குக் குறுக்காக, மாங்குளத்துக்கு அண்மையாக அணை ஒன்றை அமைத்து நீரைத் தேக்கும் உத்தேசத் திட்டமும் இருக்கிறது. இதன்மூலம் இரணைமடுவுக்குத் தேவையான நீரைத் தேக்கலாம். வான் பாயும் நீரின் அளவைக் குறைக்கலாம். அதேவேளை வான்பாய்ந்து, ஆனையிறவுக் கடலேரிக்குச் செல்லும் நீரைக் கடலேரிக்குச் செல்லவிடாது தடுப்பதற்காக ஆனையிறவுகப் பாலம் ஒன்றை அமைக்க 15 மில்லியன் ரூபாவில் திட்டம் ஒன்று வரையப்பட்டுள்ளது. மற்றும் இந்தக் குளம் புனரமைப்புக்கு 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கிளிநொச்சிக்குளம் நலிவடையும் பாரி



ஏரி புனரமைப்பு என்ற திட்டம் வரைவு செய்யப்பட்டுள்ளது. ஆனையிறவு ஏரிக்குள் சுண்டிக்குளம், தொடுவாய் வழியாகக் கடல் நீர் உட்புகுவதால், சுண்டிக்குளம் முதல் தட்டுவன்கொட்டி வரையான மக்கள் வாழும் பகுதிகள் உவரடைகின்றன. அதனால் ஆனையிறவை நன்னீரேரியாக்கிவிட 1000 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் இந்தத் திட்டம் வரையப்பட்டுள்ளது.

அத்துடன், இரணைமடுவின் வான்பாயும் நீர் அதிகளவில் ஆனையிறவு ஏரியைச் சென்றடைவதைத் தடுப்பதற்காகத் தட்டுவன்கொட்டியிலுள்ள பறவைக்குளம் புனரமைக்கப்படல், ஆனையிறவு ஏரிப் புனரமைப்புத் திட்டத்துள் அடக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தத் திட்டத்துக்கு இதுவரை நிதிவழுங்க எந்த நிறுவனமும் முன்வரவில்லை. இதேவேளை கிளிநொச்சி நகரிலுள்ள இரணைமடுவின் ஊட்டக்குளமான கிளிநொச்சிக் குளம் அல்லது றை ஆற்றுக்குளம் புனரமைப்பு மற்றும் கிளிநொச்சி நகரத்துக்குப் பொருத்தமாக அழுகுபடுத்தப்படல் திட்டமும் உள்ளது. அதேவேளை கிளிநொச்சிக்குளம் வான்பாய்கையில், அதன் வழியாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையுள்ளது. இதற்காக இந்த வான்பகுதிக்கு மேலாதாபத்தை இங்கு குறிப்பிடவேண்டும். கிளிநொச்சிக்குளத்துக்குரிய அதன் கரையோர நிலங்கள், மக்களால் அபகரிக்கப்பட்டுக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் கிளிநொச்சிக்குளம் பரப்பளவில் நலிவடைந்து வருகிறது. நகர்ப்புறத்தில் இது பலவாறான சூழல் விளைவுகளைத் தரும் என எச்சரிக்கப்படுகிறது. குளங்களின் கரைகள் அதாவது மக்களுக்குக் குடிநீரையும், விவசாய நிலங்களுக்குப் பாசன நீரையும் தரும் குளமொன்றின் கரையில், குடியிருப்புகள் அமைக்கப்படுவது நீரை மாசுறச் செய்யும். இது நமக்கு நாமே தீங்கிழைக்கும் செயல். அது நிறுத்தப்படவேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்படவேண்டும். இது இரணைமடுவை மையமாகக்கொண்ட பகுதிகளின் நிலைப்பாடு. அடுத்தது இரணைமடுவுக்கு நிகரான ஒரு நீர்த்தேக்கத்தைக் கிளிநொச்சியின் மேற்கில் அமைத்தலாகும். வன்னியைப் பொறுத்தவரை அதன் கிழக்கு நீர்ப்பாசன வளம்பொருந்தியது. ஆனால், அதன் மேற்கு வரட்சியை அதிகம் கொண்டதாகும். (தொடரும்...)

தி. தவபாலன்

# மரக்கறிகள் முற்றுவதற்கு முன்னர் விளைச்சலைப் பெறல்வேண்டும்

சில விவசாயிகள் மரக்கறி வகைகள் முற்றிய பின்னரே, அதன் விளைச்சலைப் பெற்றுக் கொள்கின்றனர். இது தவறான செயலாகும். ஒரு மரக்கறியின் போசாக்குத் தன்மை இழக்கப்படாமல் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அவை முற்றாமல் இருக்கும் போதே விளைச்சலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.



வெண்டிக்காய், பீர்க்கங்காய், பயற்றங்காய், பீன்ஸ் ஆகிய மரக்கறிகள் விளைச்சலைப் பெற்ற பின்னர் – முற்றுவதற்கும், வீணாவதற்கும் காரணம், அவை முற்றிய பின்னரே விளைச்சலைப் பெறுதலாகும். மேற்குறிப்பிட்ட மரக்கறிகளைத் தற்பொழுது பிடுங்கும் நாட்களுக்கு 23 நாட்களுக்கு முன்னதாகப் பிடுங்கிக் கொள்வதனால் அவை வீணாவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

வெண்டிக்காய் உரிய நீளத்துக்கு வளர்ச்சி அடைவதற்கு இரு நாட்களுக்கு முன்னரும் – பயிற்றங்காய், பீன்ஸ், பீர்க்கங்காய் தகுந்த நீளத்துக்கு வளர்ச்சியடைந்த பின்னரும், விளைச்சலைப் பெற்றுக் கொள்ளலாம். இதன் மூலம் அவற்றின் போசாக்குத் தன்மை முன்னரிலும் அதிக அளவு இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பாகற்காய், கறிமிளகாய், புடலங்காய் போன்ற மரக்கறிகள் பழுக்கும் தன்மைக்கு முக்கிய காரணம் – விளைச்சல் பெறும் காலத்தைத் தாமதப்படுத்தி, விளைச்சலைப் பெற்றுக் கொள்வதாகும். இதனால் இவற்றை முற்றுவதற்கு முன், விளைச்சலைப் பெற்றுக் கொண்டால், அவை வீணாவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்துடன், அவற்றை அதிக நாட்களுக்கு களஞ்சியப்படுத்தியும் வைத்திருக்க முடியும்.

முள்ளங்கி, நோகோல்ட், பீற்றூட் போன்ற மரக்கறிகளும் அதிகளவு முற்றினால் அவற்றின் சுவைத்தன்மையும், போசாக்குத் தன்மையும் குறைந்து விடும்.

எனவே விவசாயிகள் எமது பிரதேசத்தில் பயிரிடும் பயிர்களின் விளைச்சலை உரிய சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதன் மூலம் உயர் போசாக்குத் தன்மை கொண்ட மரக்கறி வகைகளை மக்களுக்குக் கொடுக்க முடியும். மேலும் விவசாயிகளும் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

சசி சந்திரகாசன்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 120/= | 140/= | 150/= | 200/= | 150/= | 100/= | 80/= | 320/= |
| வெண்டிக்காய் | 40/= | 50/= | 60/= | 50/= | 50/= | 60/= | 60/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 100/= | 100/= | 100/= | 85/= | 120/= | 80/= | 100/= |
| கத்தரிக்காய் | 80/= | 80/= | 80/= | 100/= | 100/= | 80/= | 60/= | 100/= |
| பாகற்காய் | 240/= | 140/= | 150/= | 200/= | 200/= | 260/= | 100/= | 400/= |
| கரட் | 40/= | 50/= | 50/= | 50/= | 30/= | 80/= | - | 40/= |
| பீற்றூட் | 20/= | 50/= | 60/= | - | 30/= | 60/= | 40/= | 50/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | 200/= | 150/= | - |
| வெங்காயம் | 50/= | 50/= | 60/= | 50/= | 45/= | 50/= | 60/= | 50/= |
| பச்சை மிளகாய் | 200/= | 150/= | 150/= | 200/= | 160/= | 250/= | 80/= | 300/= |

## தொழில்மலர்



# இன்றைய நவீன முகாமைத்துவமானது மக்கள் பங்களிப்பு முகாமைத்துவமாகும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**நிர்வாக அலுவலர்களைப் பொறுத்த வரையில் மக்கள் பெரும்பாலும் திருப்தியுடைய வர்களாக இருப்பதில்லை. இது ஏன்?**

பொதுமக்கள் எப்போதும் தமது தேவை களை விரைவாகப் பெறவேண்டுமென்றே விரும்புகிறார்கள். அவர்களின் தேவை களைப் பூர்த்தி செய்யும் போது, அதனுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அனை வரும் சங்கிலித் தொடராகக் கருமமாற்ற வேண்டியிருக்கிறார்கள். அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பிலுள்ள நடைமுறைகள், சட்டச்சிக் கல்கள், சுற்றறிக்கைகள் என்பனவும் சில வேளைகளில் மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்ற முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. இதனால் மக் களுக்கு அதிருப்தி நிலை உருவாகிறது. தனியார் துறையில் உள்ளதுபோல் விரை வாகத் தீர்மானங்களை எடுத்து, உடன் அமுல்படுத்தும் தன்மை அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பிலும் மாற்றம் கொண்டு வந்து அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படுவதினூ டாக எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணமுடியும்.

**பிரதேச செயலகங்களில் கூட்டப்படும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் எடுக் கப்டும் தீமானங்கள் பல, வெற்றுத்தாள் தீர்மானங்கள் என்றே பலர் கருதுகிறார்கள். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர் கள்?**

இன்றைய நவீன முகாமைத்துவமானது மக்களின் பங்களிப்புடனான முகாமைத்துவ மாகவே காணப்படுகிறது. மக்களின் ஒத்து ழைப்பின்றி எடுக்கப்படும் திட்டங்கள் பல தோல்வியடைந்திருப்பதனையே கடந்த கால வரலாறுகள் காட்டிநிற்கின்றன. மக்கள் பார்வையாளர்களாக இருந்த நிலைமாறி, பங் காளர்களாக மாறவேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. எனவே, எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைச் சாத்தியமானதா கவும், அதேநேரம் மக்களின் பங்களிப் புடனும் அமைதல் அவசியமானது. மேலும் முன்னேற்ற அறிக்கைகள், மீளாய்வுக் கூட் டங்கள், தொடர் நடவடிக்கைகள் என்பவற் றினூடாக இதில் முன்னேற்ற நிலையை ஏற்படுத்துவதுடன், இந்தத் தீர்மானங்களுக்கு உயிர் கொடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு உத்தியோகத்தர்களின் கைகளிலேயே தங்கியுள்ளதென்பதை உணர்ந்து, மக்களை யும் அதில் நேரடியாகப் பங்களிப்புள்ளவர் களாக இணைத்து கருமமாற்றச் செய் வதனூடாக இவற்றைப் பயனுள்ள தீமானங் களாக மாற்ற முடியும்.

> **ஒய்வு நேரங்களில் புத்திரிகைகளைக் கிரமமாக வாசித்ததன் காரணமாக உலக விவகாரங்கள் தொடர்பாக, நான் பெற்றுக்கொண்ட அறிவும், நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடையக்கூடிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்தது.**

**இடம் பெயர்ந்த மக்களின் வாழ்வுச் சிக்கல்கள் உங்கள் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்து கின்றன?**

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாகப் பல குடும்பங் கள் தமது சொந்த இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தனர். அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திய அமைதியான சூழ்நிலை காரணமாக, அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயங்களைச் சொந்த இடமாகக் கொண்ட மக்கள் - குடும்பங்கள் தொடர்ந்தும் இடம் பெயர் வாழ்வையே - விரும்பியோ, விரும்பா மலோ ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை உள்ளது. மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் சில சொந்தத் தொழில் முயற்சிகளை மீள வும் ஆரம்பித்து, படிப்படியாகப் பொருளாதார ரீதியில் ஓரளவு முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றனர். ஆனாலும், பல ஆண்டுகள் இடம் பெயர்வுகாரணமாக ஏற்பட்ட பொரு ளாதாரப் பாதிப்புக்களிலிருந்து, இந்தக் குடும் பங்கள் மீள்வதற்கு இன்னும் சில வருடங்கள் தேவைப்படும். அதற்குத் தற்போதுள்ள அமை திச் சூழ்நிலை தொடரவேண்டும். அதேபோல இந்தக் குடும்பங்கள் தமது வீடுகளை அமைத் துக் கொள்வதற்கான திட்டங்கள் வழங்கப்பட வேண்டும். இந்தக் குடும்பங்களின் வருமா னத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களுக்கு அரசாங்கத்தினாலும், அரச சார்பற்ற நிறுவ னங்களாலும் உதவிகள் வழங்கப்படவேண் டும்.

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு உத விகளை வழங்கும்போது, மக்களின் ஒத்து ழைப்பும், மனோபாவமும் சரியாக அமைய வேண்டும். அப்போதுதான் கிடைக்கின்ற உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரி யாக இனங்கண்டு வழங்க முடியும். நிவார ணங்கள், உதவித் திட்டங்கள் என வரும் போது, மக்கள் எப்படியாவது அந்த உதவி களைப் பெற்றுவிட வேண்டுமென்ற மனோதத் துவத்துடன் சிந்திக்கும்போது, உண்மையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நன்மை கள் சென்றடையாமையையும் காணக் கூடியதாக இருக்கிறது. எனவே இந்த விடயத்தில் மக்கள் உண்மைத் தன்மையும், பெருந்தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொண்டால் திட்டங்களைச் சரியாக நடைமுறைப்படுத்த முடியும்.

**பிரதேசத்தின் குடிநீர், சுகாதாரம், வீடின்மை போன்ற குறைகளில் தங்கள் கவனம் எத்தகை யது?**

இவை மக்களின் வாழ்வுக்கு மிகமிக அவசியமானவை. இந்தத் தேவைகள் கிராமத் துககுக் கிராமம் வேறுபட்டுக் காணப்படும். சகல கிராமங்களுக்கும் அந்தக் கிராமங்களில் செய்ய வேண்டிய வேலைகள் உள்ளடக்கப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதன் மூலம், அந்தக் கிராமத்தின் தேவைகள் இனங் காணப்பட்டு அவற்றில் மிகவும் பாதிப்படைந்த, பின் தங்கிய நிலையிலுள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்துக் கிடைக்கும் நிதி மூலங்களிலிருந்து இந்த வேலைத் திட்டங் கள் எதிர்காலத்தில் நிறைவு செய்யப்படும்.

**வளர்ந்து வரும் சமூகச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தப் பிரதேச மட்டத்தில் உங்கள் கண் ணோட்டம் பற்றிக் கூறுங்கள்?**

சமூகத்தில் இன்று - குறிப்பாக இளம் சமூ கத்தினர், பெற்றோர், ஆசிரியர், வயது முதிர்ந் தோர் ஆகியோரை மதிக்காத தன்மை எங்கும் காணப்படுகிறது. கால்மாற்றமும், கட்டுப்பாடு களில் தளர்வு கொண்டு வரப்பட்டமையும், வெளிநாட்டுத் தொடர்புகளால் ஏற்பட்ட பணப் புழக்கமும், வசதிகளும் இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றன. இந் தச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்த - பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் ஓர் அம்சமாகக் கிராமந் தோறும், அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கி, மாணவர்களுக்கு ஒழுக் கத்தையும் நல்ல பழக்கவழக்கங்களையும் கற்றுக் கொடுக்கச் செய்யப்பட்டுள்ள மைபோல், பாடசாலைகளிலும் - அதிபர், ஆசிரியர், பெற்றோர் தமது பிள்ளை களுக்கு அளிக்கப்படும் கல்வியறி வைப்போல் ஒழுக்கக் கல்வியிலும் அக்கறை காட்டுவது அவசியமாகும். ஒழுக்கம் இல்லாத கல்வியால் சமு தாயத்துக்கு எந்தவித நன்மையும் ஏற் படப் போவதில்லை.

**நிர்வாக அதிகாரி என்ற வகையில் என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

காலத்தின் மாற்றமும், அறிவு வளர்ச் சியும், இலத்திரனியல் ஊடகங்கள், தகவல் தொழிநுட்பம் என்பனவும் இன்றைய நிர்வா கத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி யருக்கிறது. இன்றைய முகாமைத்து வமானது- மக்களின் அபிலாசைகளைப் பூர்ததி செய்கின்ற, மக்களின் பங்களிப்புடன் கூடிய நிர்வாகமாகும். உத்தியோகத்தர்கள் குழுவாக இயங்கி, அவர்களின் பங்களிப் புடன் வேலைகளை நிறைவேற்றும் முகாமைத்துவ உத்திகளைக் கொண்ட தாகவும் அமையவேண்டிய தேவை உள்ளது.

மக்கள் அபிவிருத்தித் திட்டங்களில் நேரடியாகப் பங்குபற்றி, தமது விருப்புக் களை, அபிலாசைகளை, நோக்கங்களை அடைந்து கொள்ளத்தக்கதாக, பரந்த மனப்பான்மையுடன் பங்களிப்புச் செய் வார்களாயின், நிலையான, நீடித்த அபி விருத்திகளை மிகவும் குறுகிய காலத் தினுள் எமது பிரதேசத்தில் கொண்டு வர முடியும் என்பது திண்ணம்.

**எஸ்.ஜே.என்.**

# இணைய வணிகமும், மின்னியப் பணமும்



21 ஆம் நூற்றாண்டை நோக்கி உலகம் நகரத் தொடங்கியவுடன், அதனுடன் சேர்ந்து வணிகமும் நகரத் தொடங்கி விட்டது என்றே கூறலாம். அந்தளவுக்கு வணிகத் துறையினுள்ளும் நவீன முறைகள் அறி முகப்படுத்தப்பட்டு விட்டது.

நாம் முன்பு பொருட்களை வாங்கிய வுடன், பணம் அல்லது காசோலையைக் கொடுப்போம். அல்லது இவற்றிற்குப் பதிலா கப் பரிமாற்றம் செய்யக்கூடிய நம்பிக்கைக் குரியவையாக ஆவணம், சொத்துக் காணப் பட்டது. ஆனால், இப்போது நாம் பணத் துக்குப் பதிலாக வரவு அட்டை அல்லது கடன் அட்டையைப் பயன்படுத்த முடியும்.

முதலில் வரவு அட்டை என்றால் என்ன? கடன் அட்டை என்றால் என்ன? என்று அறிவது அவசியமாகும்.

வரவு அட்டையானது - உங்களுடைய வங்கிக் கணக்கில் உள்ள மீதிக்கு சமமாகும் வரை நீங்கள் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் தொகை உங் களது வங்கிக் கணக்கில் கழிக்கப்படும். உதாரணமாக - உங்களுடைய வங்கிக் கணக்கில் ரூபா 7500 மீதியாக இருக்கிறது என வைத்துக் கொள்வோம். நீங்கள் கடை யொன்றில் ரூபா 7500 வரையில் உங்களு டைய வரவு அட்டையைப் பயன்படுத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

அதே போல் கடன் அட்டை - என்பது வங்கியிடம் அல்லது தனியாரிடம் கடன் பெறுவது போல, இதனைப் பாவித்து கட னுக்குப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். பின்னர் குறிப்பிட்ட காலத்தினுள் கடனை மீளச் செலுத்த வேண்டும்.

வழக்கமாக நாங்கள் பொருள் விற் பனை நிலையங்கள் வரை சென்று, எமக் குத் தேவைப்பட்ட பொருட்களைக் கொள் வனவு செய்கிறோம். இதற்காகக் கடை கடையாக ஏறி, இறங்கி நேரத்தை விரய மாக்குகிறோம். சில வேளைகளில் விற் பனையாளருடன் பிரச்சினைப்படவும் வேண்டி ஏற்படுகிறது. ஆனால், இவ்வாறான பிரச்சினைகளை இணை யத்தள வணிகத்தில் காண முடியாததுடன், விரும்பிய நேரத்தில் நாம் பொருளைத் தெரிவு செய்யவும் முடியும். இணைய வணிக முறையில் பணம் செலுத்துவது மின்னியல் பணம் மூலம் ஆகும் .

மின்னியல் பணம் செலுத்துவது எப்படி ?

இணையத் தளம் மூலம் பொருட்கள் கொள்வனவு செய்யும் போது, கணக்குகள் பேணப்படுகின்றன. பின்னர் குறிப்பிட்ட தொகையின் மொத்தமானது, உங்களுடைய வங்கிக் கணக்கில் இருந்து பெறப்படும். இதன்படி உங்களது வங்கிக் கணக்கின் எண்ணை, கணினி மூலம் வியாபாரத் தளத்துக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் வங்கிக் கணக்கில் இருந்து குறித்த தொகை யைப் பெற்றுக் கொள்வார்கள்.

இவ்வாறு இணையத் தளம்மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நன்மைகளும், தீமைகளும் ஏற்படுகின்றன.

*நன்மைகளாக -*

1- இலகுவாகப் பொருட்களைத் தெரிவு செய்ய முடியும்.

2- விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்துக்கு இணையத் தளம் மூலம் சென்று பொருட்களைத் தெரிவு செய்ய முடியும்.

3 - ஊழியர்களுடன் பேரம் பேசத் தேவையில்லை.

4- பொருளைத் தெரிவு செய்ய முன்பு குறிப்பிட்ட பொருள் பிடிக்காது விடின், அதை இலகுவாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிடப்பட்ட நன்மைகளுடன் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன.

1- இணைய வியாபாரத்தில் இலகு வாக ஏமாற்றப்படக்கூடிய நிலை காணப் படுகிறது.

2- இணையத் தளத்தில் கடன் அட்டை அல்லது வரவு அட்டையைப் பயன்படுத்திப் பொருள் கொள்வனவு செய்யும்போது, சில வங்கிகள் சேவைக் கட்டணம் அறவிடுகின்றன.

3 - அனைவருக்கும் கணினி அறிவு இன்மை, இணையத்தள வசதியின்மை காணப்படுகின்றன.

இவ்வாறான நன்மைகள் குறைபாடு கள் காணப்பட்டபோதும், இணைய வணிகமானது பரவலாக இடம் பெறு கிறது. இதற்கு ஒரு காரணம் மின்னியப் பணக் கொடுப்பனவாகும். இந்தப் பண மானது இலகுவாக எடுத்துக் கொண்டு செல்லக்கூடியதுடன், பாதுகாப்பாகவும் வைத்திருக்க முடிகிறது.

இதனால், மின்னியப் பணத்தின் பாவனை அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது. மின்னியப் பணத்தின் பாவனை அதிக ரிப்பானது - பல வணிக நிறுவனங்கள் தமது இணைய வணிகத்தை அதிகரிக் கவும், புதிய இணைய வணிகத்தை ஆரம் பிக்க வைக்கவும் தூண்டியுள்ளது.

-வணிகன்-

# இன்றைய அரசியல் நிலைபற்றி விரிவாக ஆராயப்பட்டது

## —சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு



அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக மிகவும் தெளிவாக ஆராயப்பட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற சந்திப்பின் பின்பு, தனியார் வானொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நோர்வேயில் இருந்து மூன்றாம் தரப்பு அனுசரணையாளர்கள் வந்திருந்தார்கள். அதற்கு முன்னர் ஜப்பானிய சமாதான தூதுவர் அகாஷி வந்திருந்தார். அவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை தொடர்பாகவும் பேசப்பட்டது.

முக்கியமாக மக்கள் மத்தியில் இன்று பெரிய எதிர்பார்ப்பு இருந்தாலும், நோர்வே தரப்பினர் இந்த முறை வந்திருந்தும் கூட, ஜனாதிபதி எந்தவிதமான தகவல்களையும் தெரிவிக்கவில்லை என்ற விடயம், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அது மாத்திரமல்ல அவர்கள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையுடன் இணைந்து, இறுதித் தீர்வு தொடர்பாகப் பேச வேண்டும் என்ற அதே பழைய கதையைத் தான் கூறியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பாக விளக்கமாக நோர்வேத் தரப்புக்குக் கூறி இருப்பதாகவும், அரசாங்கம் தொடர்ந்து இப்படியான இழுபறி நிலையில் பேச்சுவார்த்தை இல்லாமல், இப்படியே செல்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது விசனத்தை நேற்று முன்தினம் கடுமையாகத் தெரிவித்தது.

இதேநிலைமை தொடர்வது நிரந்தரமாக இருக்காது என்றும், இது தொடர்பாக மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறதென்றும், ஒரு மக்கள் எழுச்சிக்குத்தான் இட்டுச்செல்லுமென்ற கருத்துக்களும் அங்கு பரிமாறப்பட்டன.

இந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வதேச சமூகத்துக்கும், சிங்கள மக்களுக்கும் இன்றுள்ள சூழ்நிலையை மிகவும் தெளிவானதாகவும், விளக்கமாகவும் சொல்வது என்ற முடிவுகளும் எடுக்கப்பட்டது.

அடிப்படையில் இன்று அரசாங்கம் தொடர்ச்சியாக இந்தப் பேச்சுவார்த்தையை பின்னடித்துக் கொண்டு போவது தொடர்பாக எடுத்த கண்டனமும், விசனமும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் 825 மாணவர்கள் கல்வியை நிறுத்தியுள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கை காரணமாக 825 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முற்றாக நிறுத்தியுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விபரங்களைத் திரட்டும் நோக்கில், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி, 5 வயது தொடக்கம் 19 வயது வரையான கல்வி கற்கும் நிலையில் உள்ள 825 சிறார்கள் முற்றாகப் பாடசாலை செல்வதில்லை எனவும், 2 ஆயிரத்து 295 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

கடந்த கால போர் அனர்த்தங்கள் மற்றும் பொருளாதார வசதியின்மை போன்ற காரணங்களினால், மொத்தமாக 3 ஆயிரத்து 120 சிறார்கள் பாதிப்படைந்துள்ளனர். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இதேபோன்று ஏனைய மாவட்டங்களிலும் இவ்வாறான நிலை காணப்படுகிறது.

# ஆறுமுகத்தான் கிராம மக்களுக்கு 21 கழிப்பறைகள் கையளிப்பு!

ஆறுமுகத்தான் கிராம மக்களின் சுகாதார மேம்பாடுகருதி - கெயர் நிறுவன நிதி உதவித் திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் 22 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 21 கழிப்பறைகள் கையளிகக்கும் நிகழ்வு அண்மையில் ஆறுமுகத்தான் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு, பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை செல்வராசா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வை.குமரன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை கிராமசேவக அலுவலர்கள், மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் தவராசா, ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

# கிளாலி, முகமாலை கிராம அலுவலக பிரிவிற்கு புனர்வாழ்வு அமைச்சால் 110 இலட்ச ரூபா அன்பளிப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் கிளாலி, முகமாலை, கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக புனர்வாழ்வு அமைச்சால் 110 லட்சம ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் முதல் கட்டமாக 40 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மேலும் பல உதவிகளைச் செய்ய அரசசார்பற்ற நிறுவனங்களான யு.என்.டி.பி., உலக உணவுத் திட்டம், யு.என்.எச்.சி.ஆர் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

யாழ்.குடாநாட்டில் வசிக்கும் கிளாலி, முகமாலை மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார். (17)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் சிரமதானம்

வடமராட்சி கிழக்கில் மாவீரர் தினத்தை முன்னிட்டு 17ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரையான காலப் பகுதியில், ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் சிரமதானம் செய்வதற்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வீதிகள் துப்புரவு செய்தல், வீதிக்கு அருகிலுள்ள பற்றைகளை வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் கிராமசேவை அலுவலர் தலைமையில், அந்தப் பகுதி மக்கள் ஈடுபடவுள்ளனர்.

இறுதி நாளான எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சிரமதான நிகழ்வில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் விசேட தளபதி கலந்து கொள்ளவுள்ளார். (17)

## புலிகளின் குரல் சிறப்பு ஒலிபரப்பு

தமிழீழ வானொலி, புலிகளின் குரல் வானோசையின் 14ஆம் ஆண்டு நிறைவையொட்டிய சிறப்பு ஒலிபரப்பு நாளை மறுதினம் காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெறவுள்ள 14ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வின் நேரடி அஞ்சலை மாலை 4.00 மணிக்கு நேயர்கள் கேட்கலாம்.

எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை மாவீரர் எழுச்சி நாள் சிறப்பு ஒலிபரப்பு மாலை 3.00 மணி வரையும் தொடர்ந்து இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்த நாள் சிறப்பு ஒலிபரப்பு, காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

27ஆம் திகதி காலை 5.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை மாவீரர் இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.




## மருதங்கேணி வைத்தியசாலையில் நிலவும்

# குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு வைத்தியசாலை அபிவிருத்திசபை மகஜர்

புதிதாகப் புனரமைக்கப்பட்டு, திறக்கப்பட்ட மருதங்கேணி கிராம வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு - வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினரால், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

2000ஆம் ஆண்டு இந்த வைத்தியசாலையில் கடமை புரிந்து, தற்போது யாழ்.மாவட்டத்தில் வேறு வைத்தியசாலையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு கடமைபுரியும் அனைவரையும் மீளப்பெறுதல்,

தற்போது இந்த வைத்தியசாலையில் ஒரு வைத்திய அதிகாரி மட்டுமே கடமை புரிகிறார். வைத்தியசாலை சீராக இயங்குவதற்கு மேலும் ஒரு வைத்தியரை நியமித்தல்,

இநதப் பிரதேச மக்களின் நன்மை கருதி பற்சிகிச்சை மேற் கொள்வதற்கு பல் வைத்தியர் ஒருவரை நியமித்தல் என்பன போன்ற முக்கிய கோரிக்கைகளை அபிவிருத்திச்சபையினர் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட அரச அதிபர், மருதங்கேணி உதவி அரச அதிபர் ஆகியோரிடம் முன்வைத்துள்ளனர். (122)

# முல்லை - பாண்டியன்குள பிரதேச வீதிகள் உரிய முறையில் செப்பனிடப்படவில்லை

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேச குடியிருப்பு வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாமையால் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழுள்ள பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், செல்வபுரம் ஆகிய கிராமங்களின் வீதிகள், மக்கள் குடியிருப்புகளில் குடியமர்ந்த பின் இதுவரையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இந்தக் கிராமங்களின் வீதிகள் சில உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான மழைநீர் குறுக்கறுத்து செல்லும் இடங்களில் நீர் வழிந்தோடும் வாய்க்கால்கள் அமைக்கப்படாமையால், தற்போது பெய்துவரும் மழையால், இந்த வீதிகளில் சில இடங்கள் சேதமடைந்துள்ளமையால், மக்கள் போக்குவரத்து செய்வதற்குத் தடையாகவுள்ளது.





கிளிநொச்சி நகரையும், வட்டக்கச்சி பிரதேசத்தையும் இணைக்கும் பிரதான வீதியின் குறுக்காக கிளிநொச்சி குளம் நிரம்பி வான் பாய்வதால் - மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதை முதலாவது படத்திலும், மோட்டார் சைக்கிளுக்குள் புகுந்த நீரை உரிமையாளர் வெளியேற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். படம்: கனகரவி

# மாவீரர் நாள் வேலைத்திட்டம் தொடர்பாக முல்லைத்தீவில் இறுதிக்கட்ட கலந்துரையாடல்

எதிர்வரும் மாவீரர் நாளை முன்னிட்டு நடத்தப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர் பான இறுதிக்கட்டக் கலந்துரையாடலும், வேலைத்திட்டங்கள் தொடர்பான விளக்கம் அளித்தலுமான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி தலைமையில் கரைத்துறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் திணைக்களங்களின் தலைவர்கள், கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் குணசிங்கம, புதுக்குடியிருப்புப பிரதேச செயலகர் செ.தயானந்தா, ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் சுபாஜினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளரால் மாவீரர் நாள் வேலைத்திட்டம் தொடர்பாக சிறப்பாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டதோடு, வீதிகள் அலங்கரிப்புப் பணிகள், சிரமதானப் பணிகள், மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு, வெளிமாவட்ட மாவர்ர்களின் பெற்றோர் வருகை தொடர்பான பணிகள் பற்றியும் எடுத்து கூறப்பட்டது.

இறுதியாக முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் சிறப்புரை நிகழ்த்தினார்.

## புனரமைக்கப்பட்ட உபஅலுவலகம்

பருத்தித்துறை பிரதேசசபையின் உபஅலுவலகமான செம்பியன்பற்று அலுவலகம் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளதால், இதன் செயற்பாடுகள் இதுவரை தனியார் வீட்டில் நடைபெற்று வருகிறது. இந்த உப-அலுவலகம் புனரமைக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்த நிலையிலுள்ளது. இதன் செயற்பாடுகளை திருப்திகரமாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கபபட்டு, இந்த அலுவலகம் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (17)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊஉங்கு இல். திருக்குறள்

## நமது நோக்கு

# பொறுப்பற்ற ஜனாதிபதியின் அர்த்தமற்ற அறைகூவல்

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு வருகிறார்களா இல்லையா என்பதை இந்த மாதத்துக்குள் அறிவிக்கவேண்டுமென சுயாதீன தொலைக் காட்சிச் சேவையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றின்போது ஜனாதிபதி சந்திரிகா காலக்கெடு ஒன்றை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்தக் காலக்கெடு விதிப்பானது ஒரு அர்த்தமற்ற அறிவிப்பேயாகும். சிங்கள – தமிழ்மக்களையும் சர்வதேச சமூகத்தையும் சமாதானத்தின் பெயரால் பேய்க்காட்டி காலம்கடத்தும் உத்தியின் மற்றொரு தந்திரோபாய நகர்வாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

சரியாக ஒரு வாரத்தின் முன்னர்தான் சமாதானப் பேச்சு வார்த்தை முன்னெடுப்புக்களின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்துப் பேசுவதற்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி முதலிலும் நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் அடுத்தும் கொழும்புக்கு விஜயம்செய்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோது இவ்வாறான காலக்கெடுவையோ சமாதானம் தொடர்பான தனது தெளிவான கருத்து நிலைப்பாட்டையோ அவர் முன்வைத்தது கிடையாது. அவர் அவ்வாறானதொரு உறுதியான காலஎல்லையை வரையறுத்து சமாதானப் பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகளை மேற்குறித்த சமாதான ஏற்பாட்டாளர்கள் மூலம் அழைத்திருப்பாரேயானால் அவர்களும் அதற்கான பதிலை அவர்களூடாகவே தெரிவித்திருப்பர்.

ஆனால் ஜனாதிபதி அவர்கள் புதிதாக எதனையும் சமாதான முயற்சிகள் தொடர்பாக சொல்லியனுப்பவில்லை என்பதே உண்மையாகும்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக வேண்டிய அனைத்தையும் அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக அந்த நேர்காணலில் மேலும் கூறியுள்ள ஜனாதிபதி , அந்த அனைத்தும் எவையென வெளிப்படையாகக் கூறியிருப்பாரேயானால் நன்றாக இருந்திருக்கும்.

ஆனால், அவர் அப்படி எதையுமே தெளிவாகக் கூறியதாகத் தெரியவில்லை.

விடுதலைப் புலிகள் தாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எப்போதுமே தயாரென்ற தமது நிலைப்பாட்டை ஆரம்பம் முதலே தீர்க்கமாக – சர்வதேச சமூகத்தின் ஊடாக வலியுறுத்தியே வந்துள்ளனர் என்பது அனைவரும் அறிந்த உண்மையேயாகும். அந்த அடிப்படையிலேயே கலைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசுடன் நிபந்தனைகள் ஏதுமற்ற வகையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி பல கட்டப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறவும் செய்தன.

அப்போதும்கூட போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலான பல்வேறு அம்சங்களை ஒப்புக்கொண்டதன் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தத் தவறியவர்கள் அரச தரப்பினரேதான் என்பதையும் அதன் காரணமாகவே பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இழுபறி நிலையானது ஒரு இறுக்கமான தேக்கநிலைக்குள்ளாகி, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்குக் கிடைத்த கடந்தகால சந்தர்ப்பங்களையெல்லாம் – சிங்கள அரசுகளின் சமாதான முயற்சிகள் மீதான நேர்மையற்றதும், தமிழ்மக்களை ஏமாற்றும் நோக்கிலானதுமான அணுகுமுறைத் தந்திரோபாயங்களே நாசம் செய்தன என்பதையும் வரலாறு அழுத்தமாக பதிவுசெய்துகொண்டேயுள்ளது.

போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாடுகளின் அடிப்படையில் தமிழ்மக்களின் இயல்பு வாழ்வு மீள்வதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இராணுவ நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தாமதங்களை மேற்கொள்ளவும் ஏமாற்றவும் அரசு முனைந்துள்ளமையாலும் – இடைக்கால நிர்வாகம் தொடர்பான விடயத்தில் பொறுப்புடன் நேர்மையாகச் செயற்படத் தவறியமையாலுமே பேச்சுவார்த்தை தொடர்பான அரச நகர்வுகள் மீதான நம்பகத்தன்மை அற்றுப்போக நேர்ந்ததுடன் – அப்போதைய எதிர்க்கட்சியும் இப்போதைய ஆளும் ஐ.ம.சு. முன்னணி கட்சியின் முக்கிய பங்காளிக் கட்சியுமான ஜனாதிபதியின் சுதந்திரக்கட்சி சமாதான முயற்சிகளை அதன் ஆரம்பம் முதலே ஏனைய பேரினவாத சக்திகளுடன் இணைந்து மூர்க்கத்தனமாக எதிர்த்தமையும் அதற்கு மற்றொரு பிரதான காரணமுமாயிற்று .

பேச்சுவார்த்தை தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டுக்கு முதற்தடவையாக வந்துள்ளதாக அந்த நேர்காணலில் ஜனாதிபதி கூறியதை ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஒப்புக்கொள்ளவில்லையே.

இடைக்கால நிர்வாக அதிகாரசபையின் அடிப்படையில் பேசுவதாக இருந்தால் அரசுக்கு சமாதான முயற்சிகளில் ஆதரவளிக்கத் தயாரென்று ஐ.தே.கட்சி அறிவித்ததற்கு இன்னமும் ஜனாதிபதி ஒப்புதல் அறிக்கையை நேரடியாகக் கூறவில்லையே....

சகல கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார். அப்படியானால் அந்த நிலைப்பாட்டைத் தெளிவாகவும் உறுதியாகவும் நேர்மையாகவும் ஒவ்வொரு கட்சியும் சர்வதேச சமூகத்தின் முன் பிரகடனம் செய்யட்டும் பார்க்கலாம்.

அதனைவிடுத்து நாளுக்கொரு அறிக்கையும் பொழுதுக்கொரு கருத்தையும் முன்வைத்து ஜனாதிபதி சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளர்களாக ஆத்மவிருப்புடன் செயற்பட அலைவோரை ஏமாற்ற முனைவது பொறுப்புள்ள ஒரு தேசத் தலைவருக்கு நாகரிகமான ஒரு செயலல்ல.

## நாடும் நடப்பும்




செய்தி:
அரசும் பேரினவாத சக்திகளும் சமாதான முயற்சிகளுககு தயாராக இல்லை... தடையாகவுள்ளனர்!
– அரசியல் அவதானிகள் கருத்து

# அரியாலையில் மக்களின் விபரங்களைத் தருமாறு இராணுவத்தினர் வற்புறுத்தல்!

(அரியாலை)

அரியாலைப் பகுதியிலுள்ள சில கிராம அலுவலர்களிடம் இராணுவத்தினர் குடும்ப விபரங்களைச் சேகரித்துத் தருமாறு கோரியுள்ளனர். இதனால் இப்பகுதிக் கிராம அலுவலர்கள் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் உள்ள கிராமஅலுவலர்களிடம் இராணுவத்தினர் நேரடியாகச் சென்று வாகனங்கள் வைத்திருப்பவர்கள், போராளி குடும்பம், மாவீரர் குடும்பம், வன்னியிலிருந்து வந்தவர்கள் மற்றும் புதிதாக வந்தவர்கள் போன்ற விபரங்களைப் பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். இதன் காரணமாக இந்தக் கிராம அலுவலர்கள் இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

நிவாரண விநியோகம், பாடசாலைச் சீருடை விநியோகம், பங்கீட்டு அட்டை, இடம் பெயர்ந்தோர் வீடமைப்பு போன்றவை சம்பந்தமான வேலைப்பளுவில் உள்ள நிலையில், இராணுவத்தினரும் விபரங்களைத் தருமாறு கேட்டுக் கொள்வதோடு, நேரடியாக தங்களுடன் மக்களின் வீடுகளுக்குச் சென்று விபரங்களைச் சேகரிக்கும்படியும் வற்புறுத்துவதாக கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி எமது செய்தியாளர் நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரத்தைக் கேட்டபோது -

அரச உத்தியோகத்தர்களுக்கு உள்ள 'ஈ கோர்ட்' சட்டத்தின்படி இது சம்பந்தமான விடயங்களைத் தன்னால் கூற முடியாதுள்ளது என்று தெரிவித்தார். (55)

# சமுர்த்தி வங்கிகளூடாக வீட்டுக் கடன் திட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி வங்கிகளூடாக வருமானம் குறைந்தவர்களுக்கு வீட்டுக் கடன் வழங்கப்படவுள்ளன.

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவால் வசதி குறைந்தவர்களுக்கான வீட்டுக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கடன் அடிப்படையில் ஒருவர் ரூபா 30 ஆயிரம் வரை கடன் தொகையாகப் பெறமுடியும் எனவும் இந்தக் கடன் தொகையை 60 மாத தவணை முறையில் கட்டமுடியும் எனவும் அறிய வருகிறது. இதேவேளை வருடமொன்றுக்கு ஆறு வீத வட்டியே அறவிடப்படும் எனவும், இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நெறிப்படுத்தல் கையேடு மூலம் சமுர்த்தி வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

# வங்கி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்தோருக்குப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் 750 பேர் வங்கி உதவிப் பயிலுநர்களாக மக்கள் வங்கிகளால் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஏற்கனவே மக்கள் வங்கியால் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய விண்ணப்பித்தவர்களிலிருந்தே நாடளாவிய ரீதியில் 750 பேர் தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

வங்கிப் பயிலுநர் பதவிக்காக நாடு முழுவதிலும் இருந்து கிடைக்கப்பெற்ற 74 ஆயிரம் விண்ணப்பதாரர்களில் 14 ஆயிரம் பேர் எழுத்துப் பரீட்சைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், அனுராதபுரம், பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

இவர்களுக்குக் கணிதம் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடங்களில் எழுத்துப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பரீட்சை வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் 750 பேர் வங்கி உதவிப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எழுத்துப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்ளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு மக்கள் வங்கிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கி 22 வயதுக்குட்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வலி. மேற்குப் பகுதியில் மாவீரர் நாள் ஏற்பாடு!

(சுழிபுரம்)

சுழிபுரம், வட்டுக்கோட்டை, மூளாய், சித்தன்கேணி ஆகிய இடங்களில் மாவீரர்தின முன்னேற்பாடுகள் வெகு விமரிசையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர், மக்கள் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு கிராம சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கூடாக மாவீரர்தின ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட சில இடங்களில் மாவீரரின் படங்கள் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டு மாலை, தோரணங்கள் அலங்கரிக்கப்பட்டு, மாவீரர் சம்பந்தமான வீடியோப் படக்காட்சிகள் ஒளிபரப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராம மக்களும் பெரு மெடுப்பில் இந்த முன்னேற்பாடுகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (207)

# குழாய் மூலம் நீர் வழங்க 'நீர்ப்' நிறுவனம் நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி - சாவகச்சேரிப் பகுதியில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவும் இடங்களுக்கு, குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை வழங்க 'நீர்ப்' நிறுவனம நடவடிக்கை எடுத்துள்ளது.

சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் இடம்பெறவுள்ள இந்தக் குடிநீர் விநியோகத்திட்டத்தின் அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கான நீர்த்தாங்கிகளை அமைத்தல் மற்றும் குடிநீர் குழாய்களைப் பொருத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கு பெரும் கஷ்டங்களை அனுபவித்து வரும் மக்கள இந்தத் திட்டததால பெரும் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது (17)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவரின் மேன்முறையீடு நிராகரிப்பு!

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து யாழ். மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி, பருத்தித்துறை நீதிவான் வழங்கிய தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தார்.

பெப்ரவரி மாதம் அனுமதிப்பத்திரமின்றி வாகனமொன்றில் மணல் ஏற்றிவந்தபோது, நெல்லியடிப் பொலிஸாரால் முள்ளிக்குறுக்கு வீதியில் வைத்து வழிமறித்துப் பிடிக்கப்பட்ட வாகனச் சாரதியான - கரவெட்டி தெற்கைச் சேர்ந்த சந்திரசேகரம் பிரகாஸ் என்பவருக்கு எதிராக, நெல்லியடிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் கே. அரியநாயகம், குற்றவாளி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அமைய, நான்கு மாதச் சிறைத் தண்டனையுடன், குறித்த வாகனத்தைப் பறிமுதல் செய்யுமாறும், மணலை புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்துக்கு வழங்குமாறும் உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி - பருத்தித்துறை நீதிவான் வழங்கிய தீர்ப்பை ஊர்ஜிதம் செய்து மேன்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தார்.

அரசியல் கட்டுரை...

கே.ரீ.கணேசலிங்கம்

**ரணில் போருக்கு இழுக்காமல் புலிகளை கையாள லாமென கருதினால் சந்திரிகா போருக்கு இழுத்து நிலைமையை மறுவளமாக கையாள விரும்புகிறார். இதில் இரண்டுமே ஆபத்தானதேயாகும்.**

# படிப்படியாக நெருக்கடிக்குள்ளாகிவரும் போர்நிறுத்த – புரிந்துணர்வு உடன்பாடுகள்

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில், போர் நிறுத்த உடன்பாடு கணிசமான பங்கை வகித்து வந்தது. அண்மைக்காலத்தில் அத்த கைய போக்கு மாறிவிடுமா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பரஸ்பரம் வெளிப்படுத்திவரும் கருத் துக்கள் - போர்நிறுத்த உடன்பாடு ஆபத்தை நோக்கி நகர்கிறதென்ப



தையே கோடிட்டுக் காட்டுகிறது. எனவே, இதன் சாதகபாதகத் தன் மைகளை விரிவாகப் பரிசீலிப்போம்.

நோர்வேயின் தூதுவர்களின் வருகையும், தமிழீழ விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன் ரன் பாலசிங்கத்தின் வருகையும் ஏதோ ஒரு அரசியல் திருப்பத்துக் கான நகர்வாகவே அமைந்திருந்தன என்பதில் சந்தேகமில்லை.

அத்தகைய நகர்வின் மறுவடிவ மாக- தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச செல்வனின் பேட்டியும், பாகிஸ்தான் கப்பல்களின் கொழும்புத்துறைமுகம் நோக்கிய நகர்வும், அந்த அரசியல் முக்கியத்துவத்தை நீடித்துக்கொண்டு செல்கிறது.

நோர்வே தூதுக்குழுவினர் இலங கையின் சமாதான முயற்சியில் அதிக நம்பிக்கை கொடுப்பவர்களாக உள் ளனர். அவர்களின் விஜயம் இரண்டு தரப்பையும் இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி யாக இருந்தது.

சந்திரிகாவின் யோசனைகளு டன் வன்னிக்கு வருகை தந்த பற்றர்சன் குழுவினர் - அதற்கான பதிலுடன் மீண்டும் சந்திரிகாவை சந் தித்துள்ளனர். ஆனால், அவர்கள் வன னிகக்கு வருகை தந்தபோது, அரசியல் ஆலோசகரும் பிரசன்னமாகியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நீண்ட நேரம் நோர்வே குழுவினருடன் கலந் துரையாடியமை குறிப்பிடத்தக்க அர சியலையே வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமை நோர்வே குழுவினருடன் அதிக நேரம பேசியதென்பது, அரசியல் ரீதியி லான அதிக தீர்மானங்களையும, முடிவுகளையும் நோர்வேத் தரப்புக்கு சுட்டி காட்டுவதாகவே அமைந்திருக கும்.

நோர்வேத் தரப்பினரோ அல்லது ஜப்பானியரோ இலங்கையில் சமா தானம் நீடிக்கவேண்டும் என்பதில் குறியாக உள்ளனர். அடிக்கடி வருவ தும், ஆலோசனைகள் பரஸ்பரம் பகிர்வுகள் நிகழ்த்தப்படுவதும் இயல்பான நிகழ்வாகப் போய்க் கொண்டிருந்தது.

தற்போதும் அதே நோக்குட னேயே அவர்கள் நகர்ந்திருப்பார்கள். ஆனால், அத்தகைய நோக்குடனான நோர்வேத் தரப்பின் நகர்வு எதிர்பாராத பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கக் கூடியதாகவே தமிழர் தரப்பு நடத் திக்காட்டியது.

அரசியல் ஆலோசகர் -சந்திப்பின் பின்பான பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிகக்கும்போது, குறிப்பிட்ட அம சங்கள் அனைத்தும் பேச்சுக்களில் கோடிட்ட அம்சங்களை அடிப்படை யாகக் கொண்டதாகவே அமையும் எனத் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்துக்கள் போர் நிறுத் தம் பாதிககப்படக்கூடிய சாத்தியப் பாடுகளை நினைவுபடுத்துவதாகவே அமைந்திருந்தன. இதனால் நோர் வேத் தரப்பு தீர்க்கமான சில முடி வுகளை எதிர்கொள்ளக்கூடியதாகவே அமைந்திருக்கும். அரசியல் ஆலோ சகரது வருகையின் முக்கியத்துவ மும் அதுவாகவே உள்ளது.

நோர்வேத் தரப்பு தமிழருக்கு எது கிடைக்கிறதோ? இல்லையோ? எது அவசியமோ, இல்லையோ சமாதா னம் நீடிக்கவேண்டும். தமிழர் அதிக ஆபத்துக்களை அனுபவத்தார் கள் என்பதை மட்டுமே ஏற்றுக்கொள்கி றார்களே அன்றி, அதற்கு மாற்றீடு அவசியமானது என்பதை தீர்மா னிக்கத் தயங்குகின்றனர்.

பேச்சுக்களிலிருந்து இன்றுவரை இலங்கை அரசு எதனையும் அமுல் படுத்தியதென்று கூறிவிடமுடியாது. காலத்தை பிற்போடுவதும், ஒத்திப் போடுவதும் அதன் தந்திரமாக இருக்கும்போது, சர்வதேச தரப்புக்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவது போல் அல்லவா காணப்படுகிறது.

இதிலிருந்து பாதுகாப்பும், மீட் டெடுப்பும் அவசியமானதொன்றாக உள்ளது. தமிழர் தரப்பு காலக் கெடுவைமுன்வைப்பது மட்டுமன்றி, மாற்றீடான அரசியல் தீர்மானங்களை முன்வைக்கத் தயாராக வேண்டும். அர சியல் ரீதியில் நம்பிக்கை தரக்கூடிய உறுதியான முடிவுகளுக்கு நோவே போன்ற தரப்புக்களை அரசியல் ரீதி யிலும், கலந்துரையாடல் என்ற மேற் கின் உபாயத்தின் மூலமும் வென் றெடுக்க வேண்டும்.

**நோர்வே தரப்பின் நகர்வை புரிந்து கொண்ட இலங்கை அரசாங்கம் அதற்கு மாற்று நகர்வாக ஆயுத தளபாடத்தை இறக்கத் திட்டமிட்டிருக்கலாம். விடுதலைப் புலிகளின் செய்தியை தெரிந்து கொண்ட இலங்கை அரசாங்கம்பதில் நடவடிக்கையாக போர் ஆயததப்படுத் தலைக் காட்டுமிரட்ட முயற்சிக்கிறது போல் தெரிகிறது.**

நோர்வே தூதுக்குழுவின் உரை யாடலுக்குப் பின்பு அரசியற துறைப் பொறுப்பாளரின் பேட்டிகளும், கருத் துக்களும் போர்நிறுத்த உடன்பாடடை அரசாங்கம் எப்படி உடைக்க முயலு கிறதென்பதை சுட்டிக் காட்டுவதாக உள்ளது. குறிப்பாக ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் இழுத்தடிப பதன் மூலம் இரண்டு விடயங்களைச் சாதிக்க விரும்புகின்றன.

ஒன்று - தமது ஆட்சியை சுமுக மாகவும், சாதகமாகவும் முடிப்பது. ஜனாதிபதி பதவிக்காலத்தை நிறை வேற்றுவதும், அடுத்த தேர்தலை தாம் விரும்புவது போல் பிற்போடு வதுமே அவரது நோக்கமாக உள் ளது.

அதுவரை நாடாளுமன்றத்தை யும், தனது கூட்டணியையும் பாது காப்பாகக் கையாளுவதே ஜனாதிபதி உடனடியாக விரும்புகிற அம்சமாகும்.

இரண்டாவது -விடுதலைப் புலி களை போரிடுமாறு அல்லது அதற் கான சூழலை ஏற்படுத்துவதற்கு முயல்வதாகும். விடுதலைப் புலிகள் போரைத் தொடங்கினால், சர்வதேச சமூகத்திடமிருந்து அவர்களை அன் னியப்படுத்தலாமென்ற ஒரு அம் சத்தை வைத்துக் கொண்டு, புலிக ளைப் போருக்கு இழுக்க முயலு கிறார்.

ரணில் - போருக்கு இழுக்காமல் புலிகளை கையாளலாமெனக் கருதி னார். சந்திரிகா போருக்கு இழுத்து, நிலைமையை மறுவளமாகக் கையாள விரும்புகிறார். இதில் இரண்டுமே ஆபத்தானதேயாகும்.

குறிப்பாக சந்திரிகாவின் சகோ தரனார் அண்மையில் உரையாற்றும் போது புலிகளையும், அதன் தலை மையையும் அதிகம் விமர்சித்ததுடன், போருக்கும் தயார், சமாதானத்துக்கும் தயார் என்ற கருத்தை முன் வைத் துள்ளார். இது உண்மையிலேயே அனுரா பண்டாரநாயக்கவின் கருத் தாக அமையாது அவரது ஆட்சி யாளர்களின் கருத்தாகவே கொள் ளப்படுதல் வேண்டும்.

அனுராபண்டாரநாயக்க அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிற்பதற்கு முயற்சிக்கிறாரோ? இல்லையோ தனது அரசாங்கம் போரைப் பற்றி கரி சனை கொண்டிருக்கின்றதென்பதை கோடிட்டுள்ளார்.

இதனால், சந்திரிகா அரசாங்கம் அரசியல் ரீதியான முறிவுகளைக் கையாள ஆரம்பித்துள்ளதற்கான ஆதாரங்கள் அதிகரிக்கின்றன. இத் தகைய தேக்க காலத்தில் அரசியல் ரீதியான நகர்வுகளை மேற்கொள்வ துடன், இராணுவரீதியான தயார்பபடுத் தலுக்கும் சந்திரிகா அரசாங்கம் முயற சிக்கிறதைக் காணலாம்.

இன்னோர் விடயத்தையும் சந்தி ரிகா அரசாங்கம் முன்னெடுத்துள் ளது. அதாவது பாகிஸ்தானிய கடற் படைக் கப்பல்களிலிருந்து அதாவது இராணுவத்துக்குரிய ஆயுத தள பாடங்களை இறக்குவதாக ஊடகங் கள் வெளிப்படுத்தியுள்ளன.

இது சந்திரிகா அரசாங்கம் போரில் குறியாக உள்ளதென்பதைக் காட்டு கிற அம்சமாகவே தெரிகிறது. நோர்வே தரப்பின் நகர்வை புரிந்துகொண்ட இலங்கை அரசாங்கம் - அதற்கு மாற்று நகர்வாக ஆயுத தளபாடத்தை இறக்கத் திட்டமிட்டிருக்கலாம். விடு தலைப் புலிகளின் செய்தியை தெரிந்து கொண்ட இலங்கை அரசாங்கம் மாற்று நடவடிக்கையாக போர் ஆயத்தப்படுத்தலைக் காட்டி மிரட்ட முயற்சிக்கிறது போல் தெரிகிறது.

அவ்வாறு இந்த அரசாங்கம் கரு தினால், அதைவிட செய்யக்கூடிய முட்டாள்தனம் வேறு எதுவாகவும் இருக்கமுடியாது. ஆனால். அதனை ஒரு சமிக்ஞையாக எடுத்துக் கொளள வேண்டிய நிலைக்குள் தமிழர்களும், தமிழரின் தரப்பும் உள்ளது.

பாதுகாப்பான நிலைகள் படிப் படியாக உடைக்கப்பட்டுக் கொண்டு வருவதனால், அத்தகைய சந்தே கம் நியாயமானதாகவே கொள்ளப் படுகிறது.

எனவே, இலங்கை இனப் பிணக் குக்கான போக்கில் நெருக்கடி படிப் படியாக அதிகரிக்கிறது. பாதுகாப் பற்ற போக்கு -போர் நிறுத்த உடன் பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின் றது. இதனால் உடனடியான பாதிப புகளை ஏறபடுதத விடாது, சர்வ தேச சமூகம் தவிர்த்தாலும் - பிராந் திய, உள்நாட்டுச் சூழல்கள் அவ்வா றில்லை. அவர்களது அரசியல் நலன களை விஞ்சும் விதத்தில், அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அனுராபண்டாரநாயக்கா கூறு வது போன்றோ அல்லது பாகிஸ்தான் கப்பல்களிலிருந்து ஆயுதம் இறக் கினாலோ போர் நிறுத்த உடன் பாட்டை இலங்கை தரப்பு உடைத்து விட்டு போர் புரிவதற்குத் தயாராக இல்லை.

பிராந்திய சர்வதேச சக்திகளின் தயவிலேயே, தனது படைகளை தக்கவைத்துள்ள இலங்கை அர சாங்கம் - மீதிக் காலத்தைப் பூர்த்தி செய்வதையே குறியாகக் கொண்டு செயற்படுகிறது. ◆

செய்திக் கட்டுரை

கொ.அ. ஸ்ரனிஸ்லாஸ்

# எமது பிரதேசத்தில் அழிந்துபோகும் கடல் வளங்களைப் பாதுகாப்போம்



எமது கடல் பிரதேசமான யாழ்ப் பாண மாவட்டத்தில் - 20,000 குடும் பங்களைச் சேர்ந்த 25,000 கடற் றொழிலாளர்கள் தமது ஜீவனோபா யத் தொழிலை மேற்கொண்டு வரு கின்றனர்.

இது கிழக்கே சுண்டிக்குளத்தி லிருந்து வடக்கே யாழ்ப்பாணப் பிரதேசத்தை உள்ளடக்கி, மேற்கே இந்திய எல்லையைத் தொட்டு, தெற்கே மன்னார் மாவட்டக் கரையை உள்ளடக்கிய கடற்பிர தேசமாகும்.

இந்தப் பிரதேசம் கடற்பரப்பள வில் மிகவும் குறைந்த பரப்பள வைக் கொண்டதாகவிருப்பினும், யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களின் கற்பகதருவாக இருந்து வந்துள்ளது.

1980 ஆம் ஆண்டுகளில் இந்த மாவட்டத்தின் மீன்பிடி உற்பத்தி யானது - சுமார் 48000 மெற்றிக் தொன்களுக்கு மேலாகும்.

இது முழு இலங்கையின் உற் பத்தியின் மூன்றில் ஒரு பங்காகும். அந்தக் காலப் பகுதிகளில் மீன் பிடித் தொழில்களில் 90 வீதமானது வழிவலைத் தொழில், தூண்டில் தொழில் கரைவலைத் தொழில் மற்றும் சிறு தொழில்கள் மட்டுமே நடைமுறையில் இருந்தன.

இந்தவகையான மீன்பிடித் தொழில்கள் கடல் வளங்களையோ, மன் இனப்பெருக்கத்தையோ உற்பத் தியையோ எந்த வகையிலும் பாதிப் படையவோ, இனப்பெருக்கத்தைக் குறைக்கவோ இல்லை.

1980 ஆம் ஆண்டுகளில் யாழ்ப பாணம் மாவட்டத்தில் தொழில்களின எண்ணிக்கை பன்மடங்காக விரிவ டைந்ததற்கேற்ப, உற்பத்தி பல மடங் காகப் பெருகியதே தவிர, வளங்க ளில் எந்தப் பாதிப்பும் ஏற்படாத தொழல் பெருக்கத்தால் இனவிருத் தியிலோ, உற்பத்தியிலோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்தக் காலப் பகுதியிலேயே தென்னிந்தியாவின் தமிழ் நாடுட் டைச் சேர்ந்த மீனவர்களின் இழுவைப்படகுகள் - வடக்கு கடற் பகுதிக்குள் ஊடுருவி, இழு வைத் தொழில் செய்து வந்தன.

வட கடற்பிரதேத்தின் ஏற்றுமதிப் பொருட்களான இறால், நண்டு, சங்கு, கடலட்டை போன்ற பெறுமதி மிக்க கடல் உணவுப் பொருட்கள் பிடிக்கப்பட்டதால், தமிழ் நாடு மீன வர்களின் படகுகளிள் வருகை பல நூற்றுக்கணக்காகப் பெருகியது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம், மன்னார், மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் வழிச்சல் வலைகள் - வகைதொகையின்றி வெட்டப்பட்டும், அழிக்கப்பட்டும், கள வாடப்பட்டும் வந்தன.

ஒரு கணிசமான வசதி படைத்த தொழில் உரிமையாளர்கள் பலர் ஒரு இரவிலேயே ஒட்டாண்டிகளாக் கப்பட்டனர்.

இதனால் ஒன்றுமே செய்வதறி யாத நிலையில், இலங்கை அரசின் அன்றைய பாதுகாப்பு அமைச்சரை இங்கு வரவழைத்து, பலாலி விமான நிலையத்தில் வெட்டிச் சூறையாடப் பட்ட வலை மீதித் துண்டுகளைக் கொண்டு, ஒரு கண்காட்சியே நடத்தி நிலைமைகளைத் தெளிவு படுத்தினர்.

எல்லாவற்றையும் பார்வையிட்ட பாதுகாப்பு அமைச்சர் - அதே வித மான இழுவைத் தொழிலைச் செய் யும் படியும், அதற்கு உதவியாக தமிழ் நாடு மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட இழுவை வலை மடிகளைக் குறைந்த விலை யில் பாதிப்படைந்த கடற்றொழிலா ளர்களுக்குக் கொடுத்தார்.

இப்படியான வலைகளைப் பெற்ற மீனவர்கள் வடபகுதிக் கடலில் இழுவை வலைத் தொழில்களை ஆரமபித்தாகள். இந்த வகையில் குருநகர், தீவகம், வல்வெட்டித்துறைப் பகுதிகளில் சுமார் 150 வரையான இழுவை வலைப்படகுகள் தமது வறுமை நிலையால் - இதனால் வரப்போகும் பின் விளைவுகளைச் சிந்திக்காமல், வட கடல் பிரதே சங்களிலுள்ள கடல் வளங்களை அழித்து, வருங்காலச் சந்ததியினின் வயிற்றில் மண் அள்ளிப்போடும் கைங்கரியத்தை செய்யத் தொடங் கினார்கள்.

இரண்டு வருட காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் போர் முனையில் உக்கிரமடைந்ததும், கடற்படையினரின் அட்டகாசங்கள், விமானத் தாக்குதல்கள் கடற்றொழி லாளர்களின் கடல் வாழ்க்கையை முற்றுப்பெற வைத்ததுமன்றி, ஆயி ரக் கணக்கான மீனவர்களைக் காவு கொண்டதுடன், எண்ணிலடங்காத குடியிருப்புகள் அழிக்கப்பட்டதையும் கணக்கிடமுடியாது.

இரத்தத்தைக் கடலில் சிந்திய உழைப்பால் தேடிய சொத்துக்கள் அழிக்கப்பட்டதுடன், எண்ணிலடங் காத் தாய்மார், சகோதரிகள் விதவை களாக்கப்பட்டு, நிர்க்கதியானார்கள்.

இன்னும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் ஆதரவற்றவர்களாகி, அநாதைகளாக்கப்பட்டனர். ◆

(தொடரும்...)

## சதாமை ஆட்சியிலிருந்து அகற்றிய போதும்

# பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இன்னமும் குறைந்துவிடவில்லை

### பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு



ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனை ஆட்சி அதிகாரத்தில் இருந்து நீக்கியபோதும் சர்வதேசத்திற்கு பயங்கரவாதிகளாலான அச்சுறுத்தல் குறைந்து விடவில்லை என பிரான்ஸ் ஜனாதிபதி ஜக் சிராக் தெரிவித்தார்.

லண்டனுக்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள சிராக் ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனைக் கைது செய்ததுடன் சர்வதேசத்திற்குத் தீவிரவாதிகளிடம் இருந்து வந்த அச்சுறுத்தல் அற்றுப் போய்விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்து வரும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

சதாம்ஹுசைனை ஆட்சி அதிகாரத்தில் இருந்து நீக்கியது ஓரளவிற்கு வரவேற்கப் படவேண்டிய விடயம் எனத் தெரிவித்துள்ள சிராக் ஈராக் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் ஐக்கிய நாடுகள்சபை ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஈராக் மீது அமெரிக்காவால் தொடுக்கப்பட்டுள்ள போரானது சதாம் ஹுசைனின் ஆட்சியினை நீக்கிய விடயத்தில் வெற்றியாகத் தென்பட்டாலும், இப்போரால் சர்வதேச உலகிற்கு பாரிய ஒரு நெருக்கடியினை ஏற்படுத்திவிட்டதாகவும், முன்னரிலும் பார்க்க ஈராக்கில் தற்பொழுதுதான் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஈராக் மீதான போரானது உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் தமது மதத்திற்கான புனிதப்போர் என்ற போர்வையில் ஒன்றிணைத்துள்ளதாகவும் இது சர்வதேசத்தின் பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் எனவும் தெரிவித்துள்ளார்.




## வெள்ளை மாளிகைக்குமுன் தீக்குளித்த ஏமன் பிரஜை!



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் வெள்ளை மாளிகை வாசலுக்கு முன்னால் முகமது அலன்சி என்பவர் வந்தார். 50 வயதுடைய இவர் அங்கு நின்ற பாதுகாப்பு அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்தார். திடீரென்று சிகரெட் லைட்டரை எடுத்து தன் உடலில் தீவைத்துக் கொண்டார். அவர் உடல் முழு வதும் தீப்பிடித்துக் கொண்டது.

தீக்காயங்களுடன் தரையில் உருண்டு புரண்ட அவரைப் பாதுகாப்பு அதிகாரிகள் மீட்டுவைத்தியசாலையில் சேர்த்தனர். காயத்துடன் அவர் அங்கு சிகிச்சை பெற்று வருகிறார். முகமது அலன்சி ஏமன் நாட்டை சேர்ந்தவர். அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவிற்கு அல்கொய்டா உட்பட பல்வேறு தீவிரவாதிகள் இயக்கம் குறித்து தகவல் கொடுக்கும் முகவராகச் செயற்பட்டு வந்தார். இதற்கு ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த சில மாதங்களாக அவருக்கு அந்த தொகை கொடுப்பதை அமெரிக்கப் புலனாய்வுத்துறை நிறுத்திவிட்டது. அவர் ஏமனுக்கு திரும்பிச் செல்லவும் அனுமதி அளிக்கவில்லை. அமெரிக்காவில் நிரந்தரமாக தங்கும் அனுமதியும் வழங்கவில்லை இவற்றை ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எழுதிய கடிதத்தில் அவர் தெரிவித்திருந்தார்.

## இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட

# காஷ்மீரின் எல்லைப்பகுதியிலிருந்து இந்திய அரசாங்கம் படைக்குறைப்பு



(புதுடெல்கி)

இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரின் எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினரின் சிறிதளவு தொகையை குறைப்பதற்கு பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி முதலாவதாக 1000 படையினர் காஷ்மீரின் தென்பகுதி நகரான அனற்றாங்கிலிருந்து வெளியேறியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். ஆனாலும் எவ்வளவு துருப்பினர் எல்லைப்பகுதியிலிருந்து குறைக்கப்படவுள்ளனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை எனத் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே பிரதமர் மன்மோகன்சிங் இரண்டு நாள் விஜயமாக காஷ்மீரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் பிரதமர் காஷ்மீர் செல்வது இதுவே முதற் தடவையாகும்.

இவ்வாறு சென்ற பிரதமருக்கு எதிர்ப்புத் தெரிவித்து முழுக்கடையடைப்பு நடத்துமாறு ஹீரியத் மாநாட்டு கட்சி அழைப்பு விடுத்திருந்தது. இதனால் காஷ்மீரின் ஸ்ரீநகர் வெறிச் சோடிக்காணப்பட்டது. இந்த நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்துகொண்ட பொதுக் கூட்ட மேடை அருகே ஊடுருவிய தீவிரவாதிகள் படையினர் மீது தாக்குதலை நடத்தினர்.

இதனையடுத்து படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இரண்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் இரண்டு படையினரும், ஒரு பொதுமகனும் காயமடைந்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங் இந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் - எல்லைப் பகுதியில் படையினரை மேலதிகமாக குறைப்பதென்பது இஸ்லாமிய தீவிரவாதிகளிடமே தங்கியுள்ளதெனத் தெரிவித்தார்.

இந்தப்படைக் குறைப்பைக் காஷ்மீர் முதலமைச்சர் முப்தி மொகமட் சையத் வரவேற்றுள்ளார். அத்துடன் காஷ்மீரில் வழமை நிலையை ஏற்படுத்த இது மிகப் பெரியதொரு முதற்படியெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் ஜிகாத் அமைப்பும் மற்றும் ஏனைய கிளர்ச்சிவாதக் குழுக்களும் இந்தப் படைக் குறைப்பை நிராகரித்துள்ளதுடன் இது ஒரு ஏமாற்றும் முயற்சியே எனவும் தெரிவித்துள்ளன.

காஷ்மீரில் 1,80,000 தொடக்கம் 3,50,000 வரையான படையினர் நிலைகொண்டிருப்பதாகவும் இந்தப்படை விலகலால் பரா துருப்பினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக் பிரஜையை சுட்டுக்கொன்ற அமெரிக்க படையினர் மீது விசாரணை



(பாக்தாத்)

பலூஜா நகரப்பள்ளிவாசல் ஒன்றில் நிராயுத பாணியாத காயமடைந்த நிலையில் காணப்பட்ட ஈராக்கிய பிரஜை ஒருவரை மனிதாபிமானமற்ற முறையில் அமெரிக்கப் படையினர் சுட்டுக் கொன்றமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தீவிரவாதிகளிடம் இருந்து பலூஜா நகரினை கைப்பற்றிய அமெரிக்கப்படையினர் நகரில் தேடுதல்களை ஆரம்பித்த வேளையில் பள்ளிவாசல் ஒன்றினுள் படுகாயமடைந்த நிலையில் 5 ஈராக்கிய பிரஜைகள் காணப் பட்டுள்ளனர். குறிப்பிட்ட பள்ளிவாசலுள் பிரவேசித்த அமெரிக்க கடற்படை வீரர்களுள் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் நிலத்தில் வீழ்ந்து காணப்பட்ட ஈராக்கிய பிரஜை ஒருவரை மனிதாபிமானமற்ற வகையில் கால்களில் தாக்கியதன் பின்னர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

காயமடைந்த ஈராக்கியப் பிரஜையை மனிதாபிமானமற்றமுறையில் அமெரிக்கக் கடற் படைவீரர் சுட்டுக்கொன்ற இச்சம்பவத்தினை தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளி பரப்பியுள்ளதுடன் சில ஊடகங்களின் செய்தியாளர்களும் படம்பிடித்துள்ளனர்.

இச்சம்பவமானது அமெரிக்கப்படைகளுக்கு பல தரப்புகளில் இருந்தும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்கக் கடற்படை அதிகாரியான ஜெனரல் சற்ரெலர் குறிப்பிட்ட சிப்பாய் தற்பாதுகாப்பிற்காக ஈராக்கியப் பிரஜையை சுட்டுக்கொன்றாரா? அல்லது யுத்தவிதிகளை மீறிச் செயற்பட்டுள்ளாரா? அல்லது மோதல்களின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியிருப்பாரா என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட

# கெயர் நிறுவன பணியாளர் ஹசன் சுட்டுக் கொல்லப்பட்டார்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் வைத்துக் கடந்த ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளால் கடத்தப்பட்ட சர்வதேச உதவிநிறுவன அமைப்பின் (கெயர்) பணியாளரான மார்க்கிரட் ஹசன் கிளர்ச்சிவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட பெண்ணொருவரின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதனை அல்-ஜசீரா தொலைக்காட்சி நிறுவனம் நேற்று முன்தினம் ஒளிபரப்பியது. இந்த வீடியோ நாடா பல நாட்களுக்கு முன்னரேயே தமக்கு கிடைத்த போதும் அதனைத் தாம் ஒளிபரப்பவில்லையென அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

இவரது கொலையை பல்வேறு நாட்டுத் தலைவர்களும் வன்மையாக கண்டித்துள்ளனர். இது ஒரு அருவருக்கத்தக்க செயலென பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்த அதே நேரம் இந்தக் கடத்தல்காரர்கள் சர்வதேச சமூகத்தால் கடும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளனரென ஐரிஸ் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கொலையெனவும் இவ்வாறு ஒருவரைக் கடத்திக்கொலை செய்வது மன்னிக்க முடியாததெனவும் பிரிட்டன் வெளியுறவுச் செயலர் ஜக்ஷிரோ தெரிவித்தார்.

ஈராக்கிய மக்களுக்காக நீண்டகாலம் சேவையாற்றிய ஒரு பெண்ணை இவ்வாறு




முரட்டுத்தனமான முறையில் கொலை செய்தமையானது அருவருக்கத்தக்க விடயமெனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே கொல்லப்பட்ட தனது மனைவியின் உடலைத் தருமாறு கிளர்ச்சிவாதிகளிடம் ஹசனின் கணவரான தக்சின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கெயர் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான ஹரோல்ட் வோக்கர் தெரிவிக்கையில் - கொல்லப்பட்ட ஹசன் மிகவும் உயர்ந்த ஒரு பணியாளர். அவர் ஈராக் மக்களுக்கு செய்த சேவை அளப்பரியது.

இவரது கொலை எதை எடுத்துக்காட்டுகின்றதென்றால் - தற்போதுள்ள நிலையில் ஈராக்கில் எவரும் ஆட்சிசெய்ய முடியாதென்பதையே என அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் திரையரங்கில் குண்டுவெடித்து இருவர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணமான மின்கோராவில் சினிமாத் திரையரங்கு ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டதுடன் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருந்து 110 கிலோமீற்றர் தொலைவிலுள்ள திரையரங்கில் பார்வையாளர்கள் நிரம்பியிருந்த வேளையிலேயே குண்டு வெடித்துள்ளது.

திரைப்படக்காட்சி முடிவடைகின்ற இறுதி நேரத்தில் பிளாஸ்ரிக் பை ஒன்றினுள் மறைத்து முன்வரிசை ஆசனங்களுக்குக் கீழே வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகப் பாகிஸ்தானியப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், குண்டை வெடிக்க வைத்த நபர் திரையரங்கின் இறுதி வரிசையில் இருந்தவாறே குண்டை வெடிக்க வைத்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் பின்வரிசை ஆசனப் பகுதியில் இருந்து முன் பகுதியில் இருந்த குண்டை வெடிக்கப் பயன்படுத்திய வயரினையும் வெடிக்கவைக்கும் கருவியினையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொ..டுவரும்



பொலிஸார் இக்குண்டுவெடிப்பு சம்பவத்தின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது குறித்து இதுவரையில் அறிந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பி.பி.சி.செய்தியாளர் சினிமாத் திரைப்படங்கள் இஸ்லாமிய மதத்தின் விழுமியங்களைச் சீர்குலைக்கும் என்கின்ற கருத்தினை உடைய அடிப்படைவாத முஸ்லிம்களால் இந்தத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எரிபொருட்களின் விலை குறைக்கப்படமாட்டாது

## கூட்டுத்தாபன தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது நட்டத்தில் சென்றுகொண்டிருப்பதனால் உலகசந்தையில் எரிபொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்தபோதிலும் இங்கு எரிபொருட்களின் விலைகளை குறைக்கமுடியாது உள்ளதாக இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்தார்.

இதன்படி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதமொன்றுக்கு 1250 மில்லியன் ரூபாவை இழந்துவருகிறது. இதில் ஒரு லீற்றர் பெற்றோல் 4.50 சதத்தாலும், ஒருலீற்றர் டீசல் 7 ரூபாவாலும் மண்ணெண்ணை ஒருலீற்றர் 12 ரூபாவாலும் நட்டத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மைய நாட்களாக சர்வதேச சந்தையில் எரிபொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் கர்ப்பிணிப்பெண் கோரமாக வெட்டிக்கொலை!

வவுனியாவில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொடூரமான முறையில் இனந்தெரியாதவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

வவுனியா குடாகச்சைகொடிப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த மாலினி குசுமலதா என்ற பெண்ணே வெட்டிக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்தின்போது பெண்ணின் கணவரும் படுகாயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று கூடி ஆராய்வு!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கொழும்பில்கூடி தற்போதைய அரசியல் நடவடிக்கை குறித்தும் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா சுயாதீன தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது சமாதானப் பேச்சுக்கள் குறித்து விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆராய்ந்து சில தினங்களில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பவுள்ளதாகத் தெரியவருகிறது.

# நிவாரணம் வழங்குவதற்கு செயலகம் நடவடிக்கை!

இடம்பெயர்ந்தோர், மற்றும் சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கான யூன் மாத நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் உடன் மேற்கொள்ளுமாறு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ்.செயலக புனர்வாழ்வு புனரமைப்பு பிரிவு அறிவித்துள்ளது.

நிவாரணப் பொருட்களை பெறுவதற்கான வழங்கல் கட்டளைகள் இன்றுமுதல் செயலக புனர்வாழ்வு புனரமைப்பு கிளையில் வழங்கப்படும் என்று செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

வழங்கல் கட்டளை பெற்றதும் நிவாரணப் பொருட்களை ஓரிரு தினங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டுறவுச் சங்கங்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பட்ஜெட்டில் சர்வதேச நிதிநிறுவனங்களின் தலையீடு இருந்தால் எதிர்ப்பு போராட்டம்!

## ஜே.வி.பி தொழிற்சங்கம் எச்சரிக்கை




இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டமானது உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனைக்கு அமையத் தயாரிக்கப்பட்டிருந்தால் தாம் அதற்கெதிரான போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ஜே.வி.பியின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பு நகரப் பகுதிகளில் ஜே.வி.பியின் தொழிற்சங்கக் கூட்டமைப்புத் துண்டுப்பிரசுரங்களை ஓட்டியுள்ளது.

இலங்கையின் நிதிக்கொள்கைகளில் சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி ஆகியன செல்வாக்குச் செலுத்துவதானது இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியன இலங்கையின் நிதிக்கொள்கைகளில் நேரடியாகத் தலையிடுவதை தமது தொழிற்சங்கக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக அந்தத் துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் வரிவிதிப்பு முறையே இலங்கையை சர்வதேச சாணய நிதியத்திலும், உலக வங்கியிலும் தங்கியிருக்கும் நிலைக்கு இட்டுச் செல்வதாக ஜே.வி.பி தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே - 2004 ஆம் ஆண்டுக்கான வரவு திட்டத்தினைத் தயாரிப்பது தொடர்பாக நிதி அமைச்சுடனான கலந்துரையாடலின்போது சர்வதேச நாணய நிதியம், மற்றும் உலக வங்கி என்பன பங்கேற்கக்கூடாது என மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியை வற்புறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசாங்க...

அளிதத வாக்குறுதிகளை நிறைவேற்றிவருகிறது. இந்தமுறை வரவு- செலவுத்திட்டத்தின்மூலம் தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படுமென எதிர்பார்க்கிறோம்.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த 6 மாதங்களுக்குள் 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது. பொது மக்களுக்கு நிவாரணங்கள் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இன்று சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வறிய மக்களின் பிரச்சினைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்பாக வரவு-செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், வருமானப் பகிர்வின்போது ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது தொடர்பான திட்டங்களும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

# படைத்தரப்பின் முறைப்பாட்டை கண்காணிப்புக்குழு ஆராய்வு!

## கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் புதிய முகாம்களை அமைத்து வருவதாகத் தெரிவித்து இண்டாவது முறையாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் தெரிவித்த முறைப்பாட்டை கண்காணிப்புக்குழு ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் எவ்வித முகாம்களையும் அமைக்கவில்லையென போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு கடந்தவாரம் பாதுகாப்பு அமைச்சுக்குக் கையளித்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

ஆனாலும் இந்தப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் தமது முகாம்களை அமைத்து வருவதாக தமக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் செய்மதிப்படங்கள் தெளிவுபடுத்துவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்திருந்த முறைப்பாட்டில் கூறியிருந்தார்.

அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் புலிகள் மீறி வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறு இவரால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவே கண்காணிப்புக் குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மட்டக்களப்பில்...

வினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது கிருஸ்ணபிள்ளை தொலைக்காட்சி செய்தி பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த யுவானந்தன் - கிருஸ்ணபிள்ளையின் தலையில் ரி-56 ரக துப்பாக்கி மூலம் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதால் இது தனிப்பட்ட கொலையாக இருக்கலாமென வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

### பிரபாகரனுக்கான...

யகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றிய பிரதிநிதி அடங்கிய 30 இற்கு மேற்பட்டோரும், யாழ். மத்திய கல்லூரி மாணவர்குழுவினரும் கலந்துகொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் என்.செல்வகுமார், செயலாளர் சிவகரன் ஆகியோரும் யாழ்.மத்திய கல்லூரி சமூகத்தின் கேடயத்தினை மாணவ முதல்வர்களும், அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### பால்மாக்களின்...

செய்வதற்கு முன்னர் பால்மா வகைகளை வழங்கும் நிறுவனங்கள் முன்வைத்த விலைப்பட்டியலை பரிசீலித்து உரிய விலையை தீர்மானிப்பதென்று முடிவுசெய்துள்ளது.

### உயர்மட்ட...

இந்த உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள்குழு நேற்றுக் காலை 10 மணியளவில் முகமாலை முன்னரங்க நிலைகள், சோதனைச் சாவடிகளுக்கும் விஜயம் செய்தது.

இதன்போது முன்னணி நிலைகளில் நிலைகொண்டிருக்கும் படையினருடன் கலந்துரையாடி அவர்களை உற்சாகம் ஊட்டிய இராணுவ அதிகாரிகள் குழு, மேலும் பல பாதுகாப்புச் சம்பந்தமான நிகழ்வுகளிலும் கலந்துகொண்டது.

இவர்கள் நேற்றுக்காலை முகமாலை சோதனைச்சாவடியைப் பார்வையிடுவதற்காக வந்ததையடுத்து ஏ-9 வீதியூடாகச் சென்ற வாகனங்கள் சுமார் ஒரு மணிநேரம் மிருசுவில் பகுதியில் தடுத்துவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### படையதிகாரிகள் - புலிகளின்...

போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பு இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் எதுவும் இல்லையென போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளமை, நாகர்கோவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல்நிலை முன்னகர்த்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் ஆகியவை குறித்து இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் நாகர்கோவில் முன்னரங்க காவல்நிலை பிரச்சினை குறித்து பிராந்திய மட்டச் சந்திப்பில் ஆராய்வது என்றும்,

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர் மட்டுமன்றி தளபதிகளும், இராணுவ உயரதிகாரிகளும் கலந்துகொள்வது எனும் யோசனையொன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்வைத்ததாகவும் தெரிகின்றது.

திருகோணமலை சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் எதுவும் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் இதனை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்தது. இதனையடுத்தே தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இதேவேளை -

கிளிநொச்சி சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் கண்காணிப்புக்குழுத்தலைவர் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டேக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பு தொடர்பாக கருத்துத் தெரிவித்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கழு அதிகாரி ஜோன் ஓஸ்கர்ஸ்கூலர்ஸ்-

திருமலை துறைமுகப்பகுதியில் விடுதலைப்புலிகள் முகாம்களை அமைத்து வருவதாகவும் மற்றும் நாகர்கோவில் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண்கள் நகர்த்தப்பட்டதாக இராணுவத்தரப்பில் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது. ஆனால், அந்த இரு விடயங்கள் பற்றியும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அந்த விடயம் தொடர்பாக உயர்மட்டச் சந்திப்புகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அண்மையில் சில காலங்களாக கண்காணிப்புக் குழுவினருடன் இடம்பெறும் சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளின் இராணுவத்தளபதிகள் கலந்துகொள்வதில்லை என்பதை சுட்டிக்காட்டினோம். இதனை ஏற்றுக்கொண்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் - இனிவரும் காலங்களில் இடம்பெறும் சந்திப்புக்களில் அரசியற்துறையினருடன், விடுதலைப் புலிகளின் தளபதிகளும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும என உறுதியளித்துள்ளார் எனத் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## க.ம.யோசேப்

தாளையடியைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய கிராம அலுவலருமாகிய க.ம.யோசேப் நேற்று (2004.11.17) காலமாகிவிட்டார். அன்னாரின் நல்லடக்கம் தாளையடி புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் 2004.11.20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்
உறவினர்கள்.

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.